கிறது. காதுகளில், அழகிய குண்டலங்கள் தொங்குகின்றன. மார்பில் குவளைமாலையை அணிந்திருக்கிறான். அந்த அழகன் யார் என்று யான் அறியேன்" என்றான்.

விசயன் வார்த்தைகளைக் கேட்ட சீவகன் வியப்புற்றான்; 'விசயனும், வசுந்தரியும் தாம் கண்ட வாலிபனை யான் என்று கூறுகின்றனர்: ஆதலால், காந்தருவதத்தையின் சூழ்ச்சியால் நந்தட்டனே என் உருவத்தைப் பெற்று வந்திருக்கிறான்' என்று எண்ணினான். உடனே விரைந்து சென்றான். நந்தட்டன், சீவகனைக் கண்டதும் ஆனந்தக் கண்ணீர், பெருகத் தருமனைக் கண்ட அருச்சுனனைப்போல் கை குவித்து அவன் பாதத்தில் வீழ்ந்தான். தொழுது கீழே கிடந்த தம்பியான நந்தட்டன் தாமரைத் தடாகம் போன்று விளங்கினான். தமையனான சீவகன் தம்பியின் முகம் முதலியவற்றை மலரச் செய்தலால் பாலசூரியனைப்போல் பொலிவுடன் நின்றான். சீவகன் நந்தட்டனை மூன்று முறை தழுவிக்கொண்டு தனக்கு உற்ற வருத்தமெல்லாம் நீங்கினான். அதைக் கண்ட விசயன், 'சீவகனும் நந்தட்டனும் உடன் பிறந்தார்' என்று அறிந்தவனாய் உவகை கொண்டான். சீவகன் நந்தட்டனை இருக்கச் செய்து; "நந்தட்ட! என் நிலைமையை அறியாமல் நீ மிகவும் வருந்தி மேனி கருகிப் போயினாய்; தாய் தந்தையரும் தோழரும் மிக வருந்தியிருப்பார்கள். பின்னர் வரும் தீங்கை முன்பே அறியாமல் எல்லாரும் வருந்தும்படிச் செய்துவிட்டேன்; அதற்காக இனி நீ வருந்தாதே" என்று சொன்னான்.

"ஐயனே! நன்மையும் தீமையும் அடைந்தவர் நீர்மட்டுமல்லர். முன்பு இருந்த இராமபிரானுக்கும் உண்டு. இராமபிரான் உம்மைப்போற் செய்யாமல் தம் துன்பத்திற்குத் தம்பியையும் உதவியாக அழைத்துச் சென்றார். நீர், என்னை, அன்று மதனன்மேல் போருக்குச் செல் என்று ஏவாமல், உடன் பிறந்த மகளிரைப்போல் உதவாதிருந்து வருந்தும்படிச் செய்துவிட்டீர்; முற்பிறப்பில் செய்த பாவத்தாலேயே உமது பாதத்தைப் பிரிந்து பாவியேன் வருத்தம் அடைந்தேன்" என்று கூறிக் கண்ணீர் சொரிந்தான் நந்தட்டன்.

"நந்தட்ட! நீ வருந்தாதே" என்று பல கூறித் தேற்றி அவனைக் கனகமாலையிடம் அழைத்துச் சென்றான். நந்தட்டன் கனகமாலையைக் கண்டதும் வணங்கினான். நந்தட்டனை இன்னானென்றறியாத கனகமாலை, சீவகனைப் பார்த்து 'இவன் யார்' என்னும் குறிப்பால் நோக்கினாள்.

"நங்காய்; இவன் உன் மைத்துனன்" என்றுகூறினான் சீவகன்.

"இத்தகைய இளைய உறவினரை எழு பிறப்பும் பெறுவேனாக" என்று கூறி நந்தட்டனுக்கு விருந்து செய்து உபசரித்தாள். விருந்துண்ட பின்னர், சீவகனும் நந்தட்டனும் தனியே இருந்து பேசினர். கந்துக்கடன் முதலியவர்களது வருத்தத்தையும், தோழர்கள் தேடியலையும் வருத்தத்தையும், அவர்கள் செய்கையையும், தான் தேடச் சென்றதையும் கூறினான். குணமாலையின் மாளிகைக்குச் சென்றதையும் அவள் கூறியதையும், பின்னர் காந்தருவதத்தையிடம் சென்று அறியாமையால் தான் கூறியதையும், அவளால் தான் இங்கு வந்து சேர்ந்ததையும் மொழிந்தான். சீவகன் அதைக் கேட்டு வருந்திக் கண்ணீர் விட்டான்.

பின்னர் நந்தட்டன் சீவகனை நோக்கி, "ஐயனே, நீர் போன பின் நிகழ்ந்தவற்றையும் சொல்ல வேண்டும்" என்றான். சீவகன், 'தான் சுதஞ்சணனால் கொண்டு போகப்பட்டதுமுதல், பதுமை, கேமசரி; கனகமாலை முதலிய மகளிரை மணந்த வரலாறுகளையும் ஒழிந்தவற்றையும் நந்தட்டனுக்குக் கூறி, 'தாய் தந்தையரைக் காணப் பெறவில்லையே' என்று வருந்தினான், நந்தட்டன் அதைக் கண்டு உள்ளம் நொந்து கண்ணீர் சொரியலானான். சீவகன் நந்தட்டனைத் தேற்றி, "வீர! பொருள் பெறலாம்; பகைவரை அழித்துவிடலாம்; பெண்டிர், பிள்ளைகள் யாவும் பெறலாம்; உண்டாக்க முடியாத சிறந்த பொருள் உடன் பிறப்பல்லவா? அத்தகைய என் தம்பியைப் பெற்றேன்; இனி எனக்கு அரியது என்ன இருக்கிறது?" என்று கூறி அவனை மகிழ்வித்தான். பின்னர் இருவரும் இனிதாக அளவளாவினர். தடமித்தன் முதலியவருக்குச் சீவகன் நந்தட்டனை அறிமுகம் செய்வித்தான். பாலும் தேனும் கலந்ததுபோல் சீவகனும் நந்தட்டனும் இனிதாகப் பொழுது போக்கிக் கொண்டு ஏமமாபுரத்தில் இருந்தனர்.

அடுத்த வாரம்:—

துறவு பூண்ட மங்கை

48, பெரிய தெரு, கும்பகோணம்.

சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு
Vol. 13 No. 28 9·8·'42 Price 2 Annas

காதற் கோயில்

சிறு கதை

★

ஸ்ரீமதி கமலா எழுதியது

காதல் சாவை விட மேம்பாடுடையது. அதன் முன் எத்தகைய அஞ்யாசமான காரியங்களும் இல்லை.

பேதா பேதங்களாலேயே குழப்பட்டிருக்கும் இப்பிரபஞ்சத்தில் பணம் படைத்தவன் சொல்கிறான் "உலகில் பணக்காரர்களே இருக்க வேண்டும், ஏழைகள் நமக்குச் சரியாயிருப்பது மகா பாபம்". ஏழை சொல்கிறான் "நாங்கள் எப்பொழுது இப்பிரபஞ்சத்தில் பிறந்தோமோ, அப்பொழுது எங்களுக்கு உங்களுடன் வசிக்க இடமளிக்க வேண்டும்." ஆனால் காதல் இந்த பேதங்களை பார்ப்பதுமில்லை, சம்மதிப்பதுமில்லை. ஏனென்றால் பேதங்கள் புத்தியை பொருத்தவை. காதல் ஹிருதயத்தை பொருத்தது.

சோட்டாநாகப்பூர் பர்வத பிரதேசத்தில் 'பலாம்' என்னும் கோட்டை மத்திய மாகாணத்தின் பிரசித்த புராண ஸதலம். கோட்டையை சுற்றி ஓடும் உரங்கா நதி; அதற்குப் பின் அடர்ந்த பீகாரண்யம். இப்படி 'பலாம்' கோட்டை பலம் மிகுந்த 'பலாம்' துர்க்கமாயிற்று.

அது வர்ஷ ருது. ஒரு நாள் உரங்கா நதியில் பயங்கரமான பிரவாஹம், ரௌத்திர ரூபம் தரித்து 'உரங்கா' கரையோரத்திலிருக்கும் பெரிய பெரிய ஜீவ விருக்ஷங்களை பெயர்த்து உருட்டிக் கொண்டு ஓட ஆரம்பித்து விட்டது. பித்துபிடித்தவள் போல் கர்ண கடூரமாய் கூவி கர்ஜித்துக் கொண்டு கரையின் மேல் அப்படியும் இப்படியும் தலைவிரி கோலமாய் ஆர்பரித்துக் கொண்டு பிரவஹிக்கத் தொடங்கியது. வீழ்ந்த மரங்கள் கொடிகளுடனும் பல புஷ்பங்களுடனும் உருண்டு மூழ்கியும் மிதந்தும் வருவது அன்றைய நதி தேவியின் அளவிற்கடங்கா சௌந்தர்யம் ரமணீயமாயிருந்தது. எப்பேர்பட்ட மனதையும் ஆகர்ஷிக்கும் அத்யத்புத பிரக்ருதியின் சௌந்தர்ய ராசி.

* * * *

ராஜ குமாரி ஸ்வர்ணலதை தன் சகிகளுடன் உரங்காவின் பிரவாஹலாவண்யத்தை பார்த்துக் கொண்டு கரையின் மேல் நின்றிருந்தாள். மனதை மயக்கும் அக்காட்சியைப் பார்த்து மயங்கி நின்றிருக்கும்போது கன்னியும் கால் சரிந்து நதியில் வீழ்ந்து உருண்டோடினள். சகிகள் பயங்கரமாய் கூவிக் கொண்டு அரண்மனைக்கு ஓடினர். அர்த்தமற்ற இரைச்சலுடன் உரங்கையின் கூவல்: அர்த்தமுள்ள ஆர்த்தநாதம் அரண்மனை பரிஜனங்களது.

ஸ்வர்ணலதை நதியில் விழ்ந்ததை கேட்டு அரண்மனை அல்லோல கல்லோலப்பட்டது. கேட்டவர்களெல்லாம் உரங்கையின் உக்கிர கரையை அணுகினர். நதி தீரத்தின் மேல் கூட்டம் கூடிற்று. வலைஞர் பெரிய பெரிய கயிற்றுடன் படகுகளை நதியில் விட்டனர். ஆனால் ராஜகுமாரியின் சமீபத்தில் சேர அவர்கள் தந்திரம் பலிக்கவில்லை. வேகவதியான பிரவாஹத்தில் படகுகள் சிக்குண்டு, படகுக்காரர்களின் கட்டுக்கடங்காமல் ஓடத் தொடங்கியது.

பழைய கோட்டையின் உட்புரம், நதி ஒரு சுற்று சுற்றிக் கொண்டு கோட்டையின் உயர்ந்த கற்சுவர்களால் தடுக்கப்பட்டு ஓடிக்கொண்டிருந்தது. ஸ்வர்ணலதையும் பிரவாஹத்தில் உருண்டு கொண்டு கோட்டையின் வெளியில் போய்விட்டால் அவளை ரக்ஷிப்பது கஷ்டம். கோட்டையின் கற் சுவற்றில் அடிக்கப்பட்டு அவள் ஜீவன் அரைக்ஷணத்தில் போய் விடும். ராஜா சாஹர் தேவன் அவன் மனைவியுடன் கண்ணீர் சோர, தங்கள் ஏகபுத்திரியின் அபாயஸ்திதியைக் கண்டு நடுநடுங்கி நின்றனர். எல்லோர் கண்களும் நிஸ்ஸஹாயவதியான ராஜகுமாரியின் மேலேயே இருந்தன. படகோட்டிகள் ராஜகுமாரியை ரக்ஷிக்கக்கூடாமல் போயினர். அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே பிரவாஹம் அவளைக் கோட்டையின் சுவற்றருகில் தள்ளத் தொடங்கியது, கரையின் மேல் நின்றுகொண்டிருந்தவர்களின் அதினமான கூக்குரல் அம்பர வீதியை அணுகிற்று. எல்லோர் கண்களிலும் கண்ணீர் புரண்டது.

கோட்டையின் உயர்ந்த சிகரத்தின் மேல் நின்றிருந்த ஓர் வாலிபன் ஸ்வர்ணலதையை பார்த்தான். க்ஷணத்தில் அவளது அபாய நிலைமை அவனுக்குத் தெரிந்தது. மறுக்ஷணம் அவ்வாலிபன் உயர்ந்த சிகரத்தின் உச்சியிலிருக்கும் பூறையின்மேல் வந்து உரங்கைக்குள் குதித்தான்.

ஜனங்கள் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருக்கும் போதே வாலிபன் ராஜகுமாரியின் அருகில் நீந்திச்சென்றான். அசேதனமான அவள் சரீரத்தை, கோட்டை சுவற்றினருகில் போகாமல் குறுக்கிட்டான், மனுஷ சக்திக்கும் மேம்பட்ட சங்கடமான சன்னிவேசம், வீர வாலிபன் தன் சக்தி முழுதையும் உபயோகித்து பிரவாஹத்தை எதிர்க்க வேண்டி இருந்தது. பூரண பிரவாஹத்தினால் பீதி க்ஷணமும் வலிவு கொண்ட நதியின் வேகத்தின் முன்பு யுவனின் வலிவு க்ஷீணமடைந்து கொண்டு வந்தது. இறப்பு பிழைப்பிற்குமுன் ஏற்பட்ட கோர யுத்தம்.

பாக்கியவசத்தினால் படகுக்காரர்களை மோசம் செய்து சென்ற படகின் கயிறு ஒன்று அவன் கைக்குள் சிக்கியது. அதன் ஸஹாயத்தினால் ராஜகுமாரியை படகில் எடுத்துப் போட சாத்தியமாயிற்று. படகும் சௌக்யமாய் கரை சேர்க்கப்பட்டது. வெகு நேரத்திற்குப் பின் ஸ்வர்ணலதைக்கு நினைவு வர ராஜா சாஹர் தேவனின் ஆனந்தம் அளவிற் கடங்காமற் போயிற்று. வீர வாலிபனின் அலௌகிக சக்தியை மெச்சி, கிருதக்ஞையுடன் அவனை துர்க்காதிபதியாக்கினான் சாஹர் தேவன்.

* * * *

அக்ஞாத குலகோத்திரனான ஜயசிம்மன் 'பலாம்' போன்ற பிரக்யாத கோட்டையின் துர்க்காதிபதியானதும் ஜனங்கள் அவன் பாக்கியத்தை மெச்சினர். அரச குலத்தவர் அவன் முன் தலை கவிழ்ந்தனர். அரசன் அவனுக்கு மரியாதை செய்தான். சகல சௌபாக்கியம் நிரம்பி இருந்தும் ஜயசிம்மன் மாத்திரம் பிரசன்ன சித்தனாய் இருக்கவில்லை. எப்பொழுதும் சோர்வுடன் ஏதோ அந்தரங்கமான வேதனையில் வீழ்ந்திருந்தான். அவன் ராஜகுமாரி ஸ்வர்ணலதையை காதலித்தான். ஆனால் அதை யாரிடத்திலும் வெளியிடவில்லை. ஜயசிம்மனின் காதல் அவ்வளவு கம்பீரமாய் இருந்தது.

ஒரு நாள் தர்பாரில் ராஜகுமாரியின் விவாஹத்தைப்பற்றிய சர்ச்சை கிளம்பிற்று. அஜயகட் அரசனின் சம்பந்தம் ஏற்றதென்று ராஜா சாஹர்தேவன் வெளியிட்டான். இவ்விஷயம் ஸ்வர்ணலதைக்குத் தெரியவே அவள் தன் தாயிடம் "தான் இவ்விவாஹத்திற்கு ஒப்புவதில்லை" என்று சொல்லி சென்றாள். இதை கேட்ட சாஹர் தேவன் ஆச்சரியத்திலாழ்ந்தான். காரணம் தெரியவில்லை.

சில காலம் சென்றது. ஸ்வர்ணலதா ஜயசிம்மன் பரஸ்பர பிரணய வ்ருத்தாந்தம் தெரிய வந்தது. அதுவும் தவிர ஸ்வர்ணலதை ஜெய்சிம்மனை மணப்பதாய் அவனுக்கு வாக்தத்தம் செய்திருப்பதாயும் தெரிய வந்தது. ஊர் பேர் அறியாத ஓர் சைனிகன் ராஜகுமாரியைக் காதலிப்பது! அப்பா! ஜெயசிம்மனின் அபராதம் க்ஷமிக்கக்கூடாதது என்று ராஜா சாஹர் தேவன் நிச்சயித்தான். க்ரோதோன்மத்தனாகி ஜயசிம்மனை சிறையிலடைத்தான்.

* * * *

திடீரென்று ஜெயசிம்மன் மாயமானதினால் ஸ்வர்ணலதை துக்கிதையானாள். அவள் உற்சாகம், உல்லாசம், சங்கீதம் எல்லாம் நின்றுவிட்டன. ராஜகுமாரி இப்படி வேதனையிலாழ்ந்ததற்கு காரணம் அவள் அந்தரங்கத் தோழி மனோரமையும், அவள் தந்தை சாஹர்தேவனும் தவிர மற்றவருக்குத் தெரியாது. ராணி துக்கத்திலாழ்ந்தாள். அரசன் உதாசீனனாயிருந்தான்.

மனோரமையின் பிரயத்தினத்தால் ராஜகுமாரிக்கு ஜயசிம்மனின் இருப்பிடம் தெரிந்தது. ஒரு நாள் இரவு அவள் மாறு வேஷமணிந்து சிறைக்குச் சென்றாள். அவ்விடம் அத்துரதிருஷ்டசாலி கிழிந்த பாயின்மேல் படுத்து புரண்டுகொண்டிருந்தான், அவனது கருணமய ஸ்திதியைக் கண்டு ஸ்வர்ணலதை கண்ணீர் சோர அவன் கால் மேல் வீழ்ந்தாள்.

ராஜகுமாரியின் ஸ்பர்சத்தினால் ஜெயசிம்மன் கண்களைத் திறந்து நோக்கினான் தன் காதல் தேவதை தன் முன் இருப்பதை பார்த்து "இதென்ன கனவா? அல்லது நிஜம்தானா? ராஜகுமாரியா?" என்பது அவனுக்கு விளங்கவில்லை. சற்று நேரத்தில் அவனுக்கு கைதியின் நிலைமை மறந்து போயிற்று.

ஸ்வர்ணலதை இரவும் பகலும் ஜயசிம்மனை விடுவிப்பதற்கு வழியை ஆராய்ந்தாள். சமயம் பார்த்து நள்ளிரவில் அவனை சந்தித்து வந்தாள். ஒரு நாள் அவனைச் சிறையிலிருந்து தப்புவிக்க ஏற்பாடு செய்தாள். வெளியேறும் நாளும் வந்தது. அன்று வெகு ஆனந்தத்துடன் இருந்தாள் அரசகுமாரி. அன்று ஜயசிம்மன் தப்பிச் செல்லும் நாள். அவனை விடுவித்து அவளும் அவனுடன் தூரதேசம் சென்று சுகமாய் வசிப்பதென்று நிச்சயித்தாள். ஸ்வர்ணலதை தன் முன் ஜீவித மனோஹர சித்திரங்களை நிர்மாணித்து அதிலேயே லீனமாயிருந்தாள். ஆனால் அச்சமயம் க்ரூர கிரஹமொன்று அவளை சர்வ நாசமாக்குவதை அவள் எப்படி அறிவாள்?

ராஜா சாஹர்தேவனுக்கு ராஜகுமாரியின் ஒவ்வொரு ஏற்பாடும் முயற்சியும் தெரிய வந்தன. விச்வாஸமுள்ள ஓர் சேவகனையழைத்து குறிப்பிட்ட நேரத்திற்கு முன் ஜயசிம்மனை

நபுன்சகத் விரோதி

அம்ருதம் போன்ற ஏ. பி. யர்குடி

இளமையும், வீரியமும் அளிக்கும் ஔஷதம். ரத்தசுத்தியளித்து, தளர்ந்த நரம்புகளுக்கு வலுவூட்டி, வீரிய விருத்தியளித்து, இல்லற வாழ்க்கையை இன்பமாய்க்கழிக்க உதவும். பாட்டில் ரூ. 10.

ஏ. பி. எண்ணெய்.

வெளிப்பூச்சுக்கு; எல்லா தோஷங்களையும் நிவர்த்திக்கும் அருமையான தைலம் பாட்டில் ரூ. 15.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனாபஜார் ரோடு, மதராஸ்.
ஏஜண்டு: எஸ். டி. பல்டானே புரசவாக்கம்.

Dr. Paul's Pure Lotus Honey

The Infallible Medicine for Cataract Glaucoma, Ophthalmia, Ulcers of Eyes, and all other eye diseases. Acts like Magic. Money back in case of failure. Price Two Dram Phial Rs. 2. V. P. Extra.

S. PAUL & CO., (Dept. S. W.)
4, Hospital Street, Dharamtola, CALCUTTA.

கொன்று வரும்படி உத்திரவிட்டான். மாலை சூரியன் எப்படி மங்கலாகிக்கொண்டு வந்தானோ அப்படியே ராஜகுமாரியின் மனதும் அதைரியமடைந்து கொண்டு வந்தது. ஸ்வர்ணலதைக்கு ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாகத் தோன்றிற்று. நிர்ணய சமயம் வந்தது. ஜெயசிம்மனிடம் மனோரமையை அனுப்பி தான் தன் தாய் தந்தையருக்கு கடிதம் எழுதத்தொடங்கினாள். "தன் இம்முயற்சிக்காக தன்னை மன்னிக்கும்படி எழுதினாள். தன் பால்ய நேசிகளையும் தன் ஜன்ம தேசத்தையும், பெற்றோரையும் மறக்க முடியாதென்றும், மறக்கமாட்டேன்" ஏன்றும் எழுதினாள். கண்களில் நீர் நிரம்பின. நீர் திவலைகளுக்கிடையில் ஜயசிம்மனின் மனோஹர ரூபம் பிரதிபிம்பிதமாயிற்று. உள்ளக்குமுறலுடன் கடிதத்தை எழுதி முடித்தாள்.

நள்ளிரவாயிற்று. புறப்படும் சமயமும் ஆயிற்று. மனோரமை திரும்பி வரவில்லை. வேதனை அதிகரித்தது. ஏதேதோ கெட்டெண்ணங்கள் தோன்றின. ஜயசிம்மனுக்கு ஏதாகிலும் அபாயம் நேர்ந்ததோ என்று நினைத்ததும் நடுங்கினாள். அதிக நேரமாய்விட்டதினால் தானே சிறைச்சாலையை நோக்கிச் சென்றாள்.

வழியில் அதி வேகமாய் வரும் மனோரமையைக் கண்டு ராஜகுமாரிக்கு பயமுண்டாயிற்று. ஆத்திரத்துடன் "ஜயசிம்மன் சௌக்கியமா?" என்று படபடக்கக் கேட்டாள். மனோரமை ஒன்றும் பேசாமல் தன் பின் வரும்படி சைகை செய்தாள். ஸ்வர்ணலதையும பேசாமல் அவள் பின் தொடர்ந்தாள். இருவரும் குப்த த்வாரத்தின் வழியாய் வெளி சென்றனர். ஸ்வர்ணலதை யந்திரம் போல் மனோரமையின் பின் போய்க் கொண்டிருந்தாள். துர்க்கத்திற்கு சற்றுத் தொலைவிலிருந்த ஜீர்ணமான சிவாலயத்திற்கு இருவரும் வந்து சேர்ந்தனர். தேவாலயத்தினுள் மினுக் மினுக் என்று மங்கிய ஒளியில் ஓர் ஆள் படுத்திருப்பது தெரிந்தது. அருகில் சென்று பார்த்தால் அந்த புருஷன் ஜயசிம்மனைத் தவிர வேறு யாருமல்ல.

* * * *

அரசன் ஆக்ஞையால் ஏவப்பட்ட கொலைஞன் சிறைசாலைக்கு வந்து ஜயசிம்மன் மண்டைமேல் கத்தியால் அடித்தான். அவன் கீழே விழவும் கொஞ்சமும் கருணை இல்லாமல் அவனைக் கோட்டைக்கு வெளியிலிருக்கும் காட்டில் வன மிருகங்களுக்கு உணவாய் எறிந்து விட்டு சென்றான். இதை எப்படியோ அறிந்த மனோரமை காட்டிற்குள் சென்று சிரமப்பட்டு ஜயசிம்மனைத் தேடி சிவாலயத்தில்கொண்டு வந்து சேர்த்தாள். அவன் இறக்கவில்லை.

கொலையாளியால் அடியுண்டு நிச்சேஷ்டனாய் ஜயசிம்மனைக் கண்டு ராஜகுமாரியின் மனம் வெடித்துவிடும்போலாகியது. அவள் கண்களிலிருந்து மடை திறந்தாற்போல் நீர் சோர்ந்தது. அதை பார்த்த மனோரமை சங்கடப்பட்டாள். அவளை சமாதானப்படுத்தி அரண்மனைக்கு அழைத்து வந்தாள்.

ஜயசிம்மன் பிழைத்திருப்பதை யறிந்தால் அரசன் என்ன செய்வானோ என்று ராஜகுமாரி பயந்தாள். மனோரமையுடன் ஒவ்வொரு நாளும் நள்ளிரவிற்கு மேல் ரகசிய வழியாய் சிவாலயத்திற்கு சென்று விடிவதற்முன் அரண்மனைக்கு வந்துகொண்டிருந்தாள்.

ஒவ்வொரு நாளும் மத்திய ராத்திரிக்குப்பின் இருவர் உரங்கா நதியிலிருந்து வெளிவந்து காட்டில் மறைகின்றனர். அதிகாலை மறுபடியும் உரங்கா நதியிலிறங்கி மாயமாகின்றனர். என்ற வதந்தி துர்க்கத்தினுள் கிளம்பியது. சாஹர் தேவனின் காதுக்கும் எட்டியது. அவன் ஸ்வர்ணலதா மனோரமையின் மேல் சந்தேஹப்பட்டு மோசூவிட்டு மறுநாளே எல்லா விஷயங்களையும் அறிந்தான்.

ஜயசிம்மன் பிழைத்திருப்பதும் ராஜகுமாரி நித்தியமும் அவனிடம் சென்றுவருவதும் அரசனுக்குத் தெரிந்ததும் அதிக கோபமுண்டாயிற்று, கோபாக்கிராந்தனாய் மனோரமையை சிறையிலிட்டு: ஜயசிம்மனை உயிருடன் சிவலாயத்திலேயே புதைத்து விட்டான்,

மனோரமையின்மேல் தன் தந்தை கோபம் கொண்டிருப்பதைக் கண்டு ராஜகுமாரத்தி மிகவும் பயந்தாள்: தன் கஷ்ட சுகத்தில் பாகஸ்தியாயிருந்த உத்தம நேசியை அவள் துர்திருஷ்டம் விபத்திற்காளாக்கிற்று.

தான் இனித் தன் பிராணபதியைச் சேருவது சாத்தியமில்லை என்றறிந்தாள். வேதனையுடன் தன்னறையில் வீழ்ந்து கிடந்தாள். யாருக்கும் அவள் மர்மமான வேதனை தெரியவில்லை.

* * * *

நள்ளிரவாயிற்று. ராஜகுமாரி தனியாய் சிவாலயத்திற்குப் புறப்பட்டாள். ஆனால் அரண்மனை சுற்றிலும் அரசனால் கடுங் காவல் நியமிக்கப்பட்டிருந்தது. பாவம், அவளுக்கு தெரியாது. எப்படியாகிலும் சிவாலயத்திற்கு செல்ல வேண்டுமென்று நிச்சயித்தாள். தூங்கிக் கொண்டிருக்கும் வேலைக்காரியின் உடை ஒன்றை எடுத்து அணிந்து கொண்டாள். ஆனால் ரகசிய வழியில் நின்றிருந்த சேவகன் மறிக்கவே கழுத்திலிருந்த ரத்தினஹாரத்தை அவனிடம் கழற்றிக்கொடுத்து எப்படியோ தப்பிவெளிச் சென்றாள்.

வர வர ஹ்ருதய வேதனை அதிகமாயிற்று. பயத்துடன் கோயிலின் வாயிலை யணுகினாள். வாசற் கதவு பத்திரமாய் பூட்டப்பட்டிருந்தது. உட்புறம் உயிருடன் புதைக்கப்பட்டிருந்த ஜயசிம்மன் உயிர் போகாமல் சங்கடத்துடன் திணறித் திணறி அறற்றும் சப்தம் அவளுக்குக் கேட்டது. திக் பிரமையுடன் வாசற்படியை அணுகி கதவைத் திறக்க அஷ்ட கஷ்டங்கள் பட்டாள். முடியவில்லை. உன்மாதினியைப் போல் கோயிலைச்சுற்றி சுற்றி வந்தாள். வந்தாள். அவள் மனத்துள் அவன் விடும் சங்கட மூச்சு ஒலித்தது: கோயில் கதவை, கைகளால் திறக்கக்கூடவில்லை. தலையை முட்டிக்கொண்டு இடித்தாள்,

மறுநாள் அருணோதயத்தில் அக்காடெல்லாம் செசேவேலென்று செங்குழம்பு பூசப்பட்டதைப்போல் இருந்தது. தினகரனின் ஸ்வர்ண கிரணங்கள் மெல்ல மெல்ல வெளிவரத் தொடங்கின. சற்று நேரத்தில் அருண கிரணங்கள் அகல, கதிரோனின் கனகக் கொடிகள் ஜீர்ண சிவாலயத்தின்மேல் படரத் தொடங்கின. பிரேம மந்திரத்தின்மேல் உயிரற்று வீழ்ந்திருக்கும் ஸ்வர்ணலதையின் மேல் செங்கிரணங்கள் தழுவின!

காலை கணக்கற்ற ஜனங்களின் கண்ணீருக்கிடையில் அக் "காதல் கோயில்" கம்பீரத்துடன் தலை தூக்கி நின்று. காதலர்களின் பிரேமையை வெளியிட்டது.

ஜகன் மோகினி நூல்கள்

மாய ப்ரபஞ்சம்	1	0
புத்தியே புதையல்	0	14
கதம்பமாலை	0	12
பட்டமோ பட்டம்	0	10

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.

சேவை.

மிகவும் உபயோகிக்கப்படும் இந்த வார்த்தையின் உண்மை அர்த்தத்தை நாங்களும் எங்கள் பாலிஸி தாரர்களும் நன்கு உணர்கிறேம். எல்லோரும், சேர்ந்து உதவுவது என்னும் உபகார சிந்தையையே அடிப்படையாகக் கொண்ட இன்ஷூரன்ஸ் தொழிலுக்கு இதுவே மூலமந்திரம்.

சென்ற 36 ஆண்டுகளாக ஸேவை புரிந்து வரும் அனுபவம் மிகுந்த யுனைடெட் இந்தியாவை நீங்கள் இன்றும் சரி, எதிர்காலத்திற்கும் சரி, பூர்ணமாய் நம்பலாம். அதன் பாலிஸிதாரர்களின் தேவைகளை அது ஒரு போதும் மறப்பது கிடையாது.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

'யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்'
எஸ்ப்ளனேட் : : : மதராஸ்.

டிரஸ்டி: சென்னை சர்க்காரின் அபீஷியல் டிரஸ்டி.
இந்தியாவெங்கும் பிராஞ்சுகளும், ஏஜன்ஸிகளும் உள்ளன

FOR FIRE & MOTOR CAR INSURANCE
CONSULT
UNITED INDIA FIRE & GENERAL INSURANCE Co., Ltd.,
UNITED INDIA LIFE BUILDING
Esplanade MADRAS.
Telephone 4241 P. O. Box 1207 Grams : UNIGEN

‘ஷிராஸ்’

★

தி. நா. சுப்ரமணியம்

எழுதியது

★

(சென்றவாரத் தொடர்ச்சி)

2

அவுரங்கஜேபுக்கும் அது புதிய அனுபவமாகத்தான் இருந்தது. அவன் அதிகாரம் செய்தே பழக்கப்பட்டவன், அவன் வார்த்தைக்கு அதுவரையில் யாரும் மறுமொழி பேசியதில்லை. அதனால் ஹீராபாய் அவனை அலக்ஷியம் செய்து மாளிகையினுள்ளே சென்றதும் அவன் திகைத்து விட்டான்.

அவன் ஒருவிதத்தில் ஆச்சரியமும் அடைந்தான். தன் வார்த்தையைச் சிறிதும் மதிக்காமல் அவள் இஷ்டப்படியே நடப்பதற்கு அவளுக்கு எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்? அது அவளுடைய மனோதிடத்தையும சுயேச்சையையும வெளிக்காட்டவில்லையா?

அவன் கோபம் தணிந்து விட்டது. ஆனால் ஹீராவினுடைய கோபத்தை எப்படித் தணித்து அவள் மனத்தைத் திருப்தி செய்வது என்பதேஅவனுக்கு விளங்கவில்லை. அதையே யோசித்து படுக்கையில் படுத்திருந்தான் அவன். அவுரங்ஜேப் மொகலாய ஸாம்ராஜ்யத்துச் சக்கரவர்த்தியின் மகன். இளவரசன்: ராஜப்பிரதிநிதி; நாளைக்கு ஸாமராஜ்யத்தின் அதிபதியாக வரப்போகிறவன். ஆயினும் அவனுக்குப் பிறர் ஸம்பிரதாயத்தை ஒட்டிக் கொடுக்கும் மரியாதைகளை, நெருங்கிய உறவினர்கள் தனித்து இருக்கும் காலத் காண்பிக்கமாட்டார்கள். யாராக இருந்தாலும் தாய்க்குத் தன் மகனைக் கோபித்துக் கொள்ள பாத்தியதை உண்டு. அதுபோலத் தன் புருஷனிடம் கோபம் கொண்டு ஊடல் செய்ய அவன் மனைவிக்கு உரிமை உண்டு.

ஆனால் அத்தகைய உரிமை அடிமைக்கு உண்டா? ஏன் கிடையாது? எத்தகைய உத்திரவுக்கும் ஓர் அடிமை கீழ்படிந்து போவது உயிரற்ற யந்திரத்தின் செயல் போலவே ஆகிவிடும். அதனால் ஏவினவருக்கோ, காரியத்தைச் செய்து முடித்தவருக்கோ மனத் திருப்தி உண்டாகாது. தவிர அவள் அடிமையா?

அவன் அன்புக்கு அவள் என்றைத் தினம் பாத்திரமாக ஆனலோ அன்றைக்கே அவளது அடிமைத் தளை தறித்துவிட்டது. காதலும் அடிமைத்தனமும எப்போதும் ஒன்று சேர்ந்திருக்க முடியாது. அவள் பெயரளவில் அடிமையாக இருக்கலாம். ஆனால் அவனே அவளுக்கு அடிமை. காதலின் சக்தி அது. அன்றி அவள் வயிற்றில் ஒரு குழந்தை பிறந்துவிட்டால் பெயரளவில் இருந்தஅடிமைத்தனமும் போய் விடாதோ?

‘கூடல் இன்பம் ஊடலில் தெரியும்’ என்பர். இந்தக்குட்டிக் கலகங்களே வாழ்க்கையின் சுவையை இனிமையாக்குகின்றன. இல்லாவிட்டால் திகட்டிவிடும்.

அவன் தேவியருள் தில்ராஸ் வானுபேகம் ஒருத்திதான் அவுரங்கஜேபினிடம் இவ்விதம் மறுத்துக் கூறும் தனிமை கொண்டவள். ஆனல் அவளிடம் அவுரங்கஜேபும் ஒரு விதமான அச்சம் கொண்டிருந்தான். அவள் பாரசிகத்து ராஜவம்சத்தைச் சேர்ந்தவள். அவளுடைய தந்தை மொகலாய ஸாம்ராஜ்யததின் பிரதான தர்பாரி. அத்தகைய குலப்பெருமை கொண்ட அவள் தன் கணவனிடம் அடிமைபோல இருக்காமல் மிடுக்குடன் நடப்பது சகஜம்.

ஆனல் இவளோ?

அவுரங்கஜேப் ஹீராவின் போசகைக் கண்டு வியந்தான். அவளிடம் அவன் கொண்டிருந்த காதலின் பெருக்கு அதிகமாயிற்று. இல்லாவிட்டால் அவன் தன் தந்தையின் ஆணையையும் மீறி, பர்ஹாம்பூரில் தங்குவானு?

யாரோ கலகக்காரர்கள் இந்த விஷயத்தை ஷாஜஹான் காது வரையில் எட்டவைத்து விட்டார்கள்: உள்ளது உள்ளபடியாக அன்று; அதற்குக் கண் காது வைத்து உருவகப்படுத்திப் பூதகாரமாகச் செய்து விட்டார்கள்.

உத்தரவுகள் ஒன்றன் மேல் ஒன்ருகப் பறந்தன. அவுரங்கஜேப் உடனே பர்ஹாம்பூரை விட்டுக் கிளம்பித் தன் சுபாவின் தலைநகரை அடையவேண்டுமென்று. ஆனல் இளவரசனுக்கோ உடனே கிளம்பிப் போவதில் இஷ்டமில்லை. காதல் வாழ்க்கையின் மதுவ்வயருந்தி மயங்கிக் கிடநதான். தன் சுபாவை அடைந்துவிட்டால் வேலையில் கவனம் செலுத்திக் காதலை மறக்க நேரிடும் என்பதை அவன் நன்ருக அறிவான். அதனல் பயணத்தைத் தாமதப்படுத்தக் காரணங்களா கிடைக்காமல் போய்விடும்? அவளை அடைய அவன் பட்ட கஷ்டங்களுக்கும் அவஸ்தைகளுக்கும் இந்தக் கொஞ்சகால இன்வாழ்க்கை கொஞ்சமும் ஈடாகாதே! அவன் அவளை அடைந்ததே ஓர் அதிசயமான கதைதான்.

* * * * *

“வா அப்பா. ஸௌக்யமா? எப்போது இவ்விடம் வந்தாய்? மும்தாஜ் க்ஷேமமாக இருக்கிருளா? எப்போது ஆக்ராவிலிருந்து கிளம்பினுய்?” என்று கேட்டுக்கொணடே உள்ளே நுழைந்தாள் அவள்,

ஆனல் அவனே அவளுக்கு மறுமொழி ஒன்றும் கூறவில்லை. அவன் அவளைப் பார்க்கவும் இல்லை. அவன் கேள்விகளைக் காதில் வாங்கிக் கொள்ளவும் இல்லை. அவன் கவனம் முழுதும ஜன்னலைத் தாண்டி வெளியே சென்றிருந்தது.

மாலை நேரம். கதிரவன் தன் கிரணங்களைப் பரப்பி எல்லாப் பொருள்களையும் முலாம் பூசியதைப் போல மின்னச்செய்து வந்தான், ஆற்றில் சிறு பிரவாகம் சலசலவென்று அஸ்தமிக்கும் சூரியனை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது.

தப்தி நதிக்கரையின் அக்கரையில் அந்த மாளிகையின ஒரு தோட்டம் இருந்தது. அதுவும் அழகிய தோற்றத்துடன் அந்த வேளையில் விளங்கியது என்பதை நாம் வருணித்துக் கூற வேண்டியதில்லை. அங்கே

“மைக் கணு ளொருத்தி
யெட்டா
நிமிர் கொம்பை
வளைக்குந் தோறும்.
கைக் குநேர்
படாமை வாடுங்
கடிமலர்க் கொடிபோ
னிற்ப”

தைக் கண்டான் அவன். அவுரங்கஜேபின் உள்ளம் அந்தக் காட்சியிலேயே லயித்து விட்டது. அவள் நிலையைக் கண்டு வருந்தினுன். எட்டா மாம்பழத்தை எட்டிப் பறிக்கும் நோக்கத்துடன் அவள் எழும்பி எழும்பிக் குதித்துக் கொண்டிருந்தாள்.

நாலைந்து தடவை முயன்று பார்த்தாள். பழம் கிட்டவில்லை. மெல்லிய இடை துவள, அடிகள் நோவ, அவளுக்குச் சலிப்பு உண்டாகியது: நெற்றியிலே முத்து முத்தாக வேர்த்து விட்டது. அவள் அப்படியே செயலற்றவளாக அயர்ந்து நின்று விட்டாள். ஆயினும் அவள் பார்வை அந்த மாம்பழத்தின் மீதே விழுந்திருந்தது. அதை விட்டு நீங்கவில்லை. அதை எப்படிப் பறித்துச் சுவைக்கலாம் என்றே ஏங்கி இருந்தாள்.

அவுரங்கஜேப் அவளுக்காக இரங்கினன். சாதாரணப் பெண் ஒருத்தி அவ்விதம் அவஸ்தைப்பட்டிருந்தால் அவன் அதைக கண்டும் கருத்தில்கொண்டிருப்பானு என்பது சந்தேகம தான். நிச்சயம இல்லை யென்றே கூறலாம். ஆனல் அவளை இழுத்தது அவளுடைய அழகு.

அவள் முஸ்லீம் ஸ்திரீயல்லள்: தலையில் கோஷா போல முக்காடு போட்டிருக்க வில்லை. புடைவைத் தலைப்பு முதுகுப் புறம் அலைந்து கொண்டிருந்தது. அதனல் சூரிய காந்தியுடன் விளங்கிய அவளுடைய முக மண்டலம் நல்ல பிரகாசமாக ஜொலித்தது கடை வழியளவு மைதீட்டியிருந்த அந்த கறுப்புக் கண்களில் தவழ்ந்த குறும்பு அவனை வசிகரித்தது. அந்த இளமைக் குறும்பும் சுயேச்சை உணர்ச்சியும் இல்லாவிட்டால் அவள் அப்படி மரக் கிளையைத் தழைத்துப் பழம் பறிக்க முற்படுவாளா?

அவளுக்கு விரைந்து சென்று உதவ எண்ணியது அவன் உள்ளம். ஆனல் எப்படி அவன் உதவ முடியும்? ஏன் எப்படிக் கொம்பை பிடித்து வளைத்து நிறுத்தி விட்டால் அவள் பழத்தைச் சுலபமாகப் பறித்துக் கொள்ளலாமே.

இல்லா விட்டால்,

“ தைக்கும் பூங்கணை
வேளன்ன
நெரு மகன
தலைப்பட் டென்னை
எய்க்கின்ருய்
தோன்மே லேறிப்
பறியென வேந்தி
நின்ருனைப் ”

போலத் தானும், ஏன் செய்யக் கூடாது. அவள் தன் முதுகின் மீதோ, தோள் மேலோ ஏறி பறித்துக் கொள்ளலாகாதா?

தன் வருகையைக் கண்டு ஒரு கால் அவள் வெட்கப்பட்டு மறைந்துவிட்டால்...! பிறகு அவளைக் கண்ணாரப் பார்க்கும் பாக்கியமும் போய்விடுமே!

இவ்விதம் ஏங்கி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்; தன் நிலையை மறந்துவிட்டான்; பக்கத்தில் நடப்பவற்றைக் காணவில்லை. ஆனல் அவன் உள்ளத்தை நன்ருக அறிந்து விட்டாள் அவன் சிறு தாயார். அது அவனைத் திடுக்கிடச் செய்தது.

“என்ன அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிருய்?” என்று கேட்டுக் கொணடே அவள் தன் தமக்கை மகனுடைய பக்கத்தில் வந்து அவுரங்கஜேபின் தோளைப் பற்றினுள்.

* * * * *

அந்த ஸ்பரிசம் அவன் உடலில் மின்சாரத்தைப் போலப் பாய்ந்தது; பல கூரிய ஈட்டிகளைக் கொண்டு தாக்குவதே போல வேதனையை உண்டாக்கியது. தன் உள்ளக் கிடகதை வெளிப்பட்டுவிட்டதே என்று அவன் கொண்ட ஏக்கமே காரணம்.

அந்த அவமானத்தினின்றும் தப்புவதற்கு ஏதாவது ஒரு வழியை உடனே சிருஷ்டித்தாக வேண்டும். கவலைப்பட்டு உருகுவதால் பயனில்லை என்பதை உணர்ந்தாள்.

அவ்வளவு தான். அவன் கண்கள் அப்படியே நிலைகுத்திட்டன. பார்வை மங்கி வெறித்துக் காணப்பட்டது. கை கால்களில் சிறு வலிப்பு உண்டாகியது. நின்றிருந்த அவுரங்கஜேப் நின்றிருந்தபடியே கீழே சாயப் போனுன்,

“என்ன அப்படிக் கேட்கிருயே? நீ விரும்புவது எதுவாயினும் அதைச் செய்துமுடிக்கச் சித்தமாயிருக்கிறேன். ஏன், உனக்காக என் உயிரையே வேண்டுமானுலும் கொடுக்கக் காத்திருக்கிறேன்” என்று கூறி அவுரங்கஜேபைத் தேற்றினுள் அவன் சிறிய தாயார்.

ஆனல் அவனுக்கோ தன் ஆசையைத் தெரிவிக்கும் வழி விளங்கவில்லை. கண்ணை மூடிக் கொண்டு சிறிது படுத்துக்கிடந்தான். பிறகு மெதுவாக ஒரு பெருமூச்சுவிட்டுக் கண்களைத் திறந்து மிரளமிரள விழித்தான்,

“சித்தி, அன்றைக்கு நான் ஆற்றங்கரைத் தோட்டத்தில் பார்த்தேனே, ஹீராபாய்... அவளை...” என்று தனிந்த குரலில் ரகசியமாகக் கூறினுன்; இல்லை, கெஞ்சினுன்.

அதைக கேட்டவுடன் அவள் முகம் சவம்போல வெளுத்து விட்டது. பிரமை கொண்டவள் அவள் அப்படியே கல்லாய்ச் சமைந்து விட்டாள்.

“அடபாவி, தலையில் பாருங் கல்லைத் தூககிப் போட்டு விட்டாயே!” என்று தான் கூறினள் அவள். வேறொன்றும் அவளால் சொல்ல முடியவில்லை.

கொஞ்சநேரம் ஒருவரும் பேசவில்லை. இருவரும் அந்தவிதமாக இருந்தனா. அவுரங்கஜேப் படுத்திருந்தான். அவன் சிறிய தாயார் அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருநதாள.

அன்றையதினம் மூர்ச்சையாகிக் கீழே விழவிருந்த அவனைத் தாங்கிய அவனுடைய சிற்றன்னைக்கு அதற்குப் பிறகு சரியான தூககமே கிடையாது. ஆட்களைக் கூப்பிட்டு அவனைத்தூக்கி வந்து மஞ்சத்தில் கிடத்தச் செய்தாள். உடனே அரண்மனை வைத்தியரை அழைத்து வர ஆள் அனுப்பினுள்.

அவன் இளவரசன்; ராஜப்பிரதிநிதி. அவனைச்சுற்றி எந்நேரமும் பலர் சூழ்ந்திருப்பர். அவர்களுள் பலர் உயாந்த உத்தியோகம் வகித்து வந்தவர்கள். அவளோ முஸ்லீம்ஸ்திரீ:கோஷா; அந்தபுரத்தை விட்டு வெளியே வருவதற்குஉரிமை இல்லாதவள். அதனல் அவள் அவுரங்கஜேபை தன் அந்தபுரத்துக்கே அழைத்துச் சென்று சைத்தியோபசாரங்கள் செய்தாள். அவள் பக்கத்தில் இருந்து எல்லாவற்றையும் கவனிக்கச் சாத்தியமாயிற்று.

சாயங்காலம் மூர்ச்சையாகி விழுந்தவன் நள்ளிரவு வரையில் கண்ணைத் திறக்கவே இல்லை. அது வரையில் ஆகாரம் ஏதும் செய்யவுமில்லை. கிழித்த நாரைப் போலக் கிடந்தான். இரவு மூன்ரும் ஜாமத்தில்தான் மெள்ளத் தன் கண்ணைத் திறந்தான்.

அவன் உண்மையில் மூர்ச்சையடைந்து விடவில்லை. வெறும் பாசாங்குதான் அது. ஆயினும் அது வெளியில் தெரிந்து விட்டால் குடி முழுகிப் போய் விடும் என்றே எண்ணினுன். அவனுக்கே பசி வயிற்றைக் கிள்ளியது. அதையும் பொறுத்துக் கொண்டு கண் மூடிக் கிடந்தான் அவன்.

அவன் கண்ணைத் திறந்து பார்த்த போது அவன் சிறு தாயார் பக்கத்தில்தான் உட்கார்ந்திருந்தாள். “எங்களை எல்லாம் எவ்வளவு தூரம் கலங்க வைத்து விட்டாய்? உனக்கு இதற்கு முன் இம்மாதிரி எப்போதாவது வந்ததுண்டா?” என்று பரிவுடன் கேட்டாள் அவள்.

அவுரங்கஜேபுக்கோ சரியான சமாதானம் சொல்ல முடியவில்லை. அதற்கு அம்மாதிரி எப்போதும் நடந்ததில்லையே! அவனைக் காதல் என்னும் கொடிய விஷப் பாம்பு அதற்கு முன் கடித்ததே இல்லை. ஏதோ விஷமில்லாத் தண்ணீர்ப் பாம்புக் கடி போன்றவற்றை அனுபவித்திருக்கிருன். சுண்ணும்பைக் குழைத்துப் போட்டால் தண்ணீர்ப் பாம்பின் விஷம் போய் விடும். அதே போல் அவனுடைய காதல் நோயும் விரைவில் குணப்பட்டு வந்தது.

* * * * *

“சமூகத்தில் உத்தரவு அளித்தால் ஒரே நிமிஷத்தில் இந்த அடிமை காரியத்தைப் பூர்த்தி செய்துவிட முடியும்” என்று தைரியம் கூறினுன் தக்ஷிணத்துத் திவானை மூர்ஷித் குலிகான். அவனும சுபாதாரைப் பார்க்கப் பர்ஹாம்பூர் வந்திருந்தான். அவனுக்கு அவுரங்கஜேபின் உள்ளக் குறிப்பு தெரிந்து விட்டது. அது ரகசியமான செய்தியாக இருந்தால் அன்ருே? ஊர் முழுவதும் பரவி விட்டதே. பெரிய இடத்துச் செய்தி மிகச் சிறியதாக இருந்தாலும், அது வெகு விரைவாகப் பரவி விடும் சக்தி வாய்ந்தது.

திவான் கூறிய வார்த்தை அவுரங்கஜேபுக்குக் கொஞ்சம் ஆறுதல் அளித்தது. ஆயினும் அந்தக் காரியம் நடை முதலில் சித்தி பெறுமா வென்ற சந்தேகம் அவனுக்குப் பலமாக இருந்தது. அதனல் அவன் திவானைப் பார்த்து, “எப்படி?” என்று கேட்டான். மூர்ஷித் ‘வெட்டொன்று துண்டிரண்டு’ என்று பேசும் சுபாவம் உடையவர்; அன்றி எஜமானருடைய நோக்கம் அறிந்து சாமர்த்தியமாக நடந்துகொள்ளும் திறமை வாய்ந்தவர்.

“ஏன்? ஹீராபாயைக்கைப்பற்றித் தங்களிடம் கொணர்ந்து சமர்ப்பித்து விடவேண்டியது.” என்று சுருக்கமாகப் பதில் கூறி விட்டார் திவான்.

“அது எங்கேயாவது சாத்தியமாகுமா? யாராக இருந்தால் என்ன? தெருவோடு போகும் ஒருத்தியைச் சுலபமாகத் தூக்கி வந்து விட முடியுமா? அன்றி அவள் சாதாரணமானவளா? மொகலாய தர்பாரியும் சேனுநாயகருமான மீர்கலீல்கானுடைய அடிமை அவள். அதனல் அவளை அவுரங்கஜேப் தூக்கி வந்து விட்டால் அவர் சும்மா விட்டு விடுவாரா? ஒருகால் அந்த இடத்திலேயே ரத்தக் களறி நேரிட்டாலும் ஏற்படக் கூடும். அல்லது அவர் சக்கரவர்த்தியான தந்தையினிடம் புகார் செய்துவிட்டால் என்ன செய்வது?—இவ்விதம் எண்ணினுன் இளவரசன்.

இதனை அறிந்த திவான். “தாங்கள் ஒன்றுக்கும் கலங்கவேண்டியதில்லை. மீகலீல்கான் ஏதாவது தகராறுசெய்தால் இதோ” என்று தம் உடைவாளைத் தொட்டுக் காண்பித்து அர்த்த புஷ்டியுடன் இளவரசனை நோக்கினுர். அவர் சொல்லாமல் சொன்ன விடை அவருடைய தோற்றத்தால் வெளியாகியது.

“ஐயையோ” என்று தடுமாற்றத்துடன் வாய்விடடுக் கூறினுன் அவுரங்கஜேப். அதனை அவன் மனத்தால் எண்ணவும் விருபபவில்லை. ‘சிற்றப்பனைக் கொன்ருல் சித்தி விதவையாகப் போய் விடுவாளே’ என்று நினைத்த மாத்திரத்திலேயே அவன் உடல் நடுங்கியது.

ஆனல் வேறு வழி என்ன?

“ஹீராபாயைப் பற்றிய பேச்சை எடுததால்என்னைக்கொன்று விடுவதோடு அவளையும் அதம் செய்து பெருங்கலகத்தை விளைவித்து விடுவாரே அவர்” என்று அன்றைக்கு அவனுடைய சித்தியான பேகம் சொல்லிவிட்டாள்.

‘உண்மைதான். ஹீராபாய், மீர்கலீல்கானுடைய அடிமை;காதற் கிழத்தி. அவளை அவர் சற்றும் விட்டுப் பிரியமாட்டார். அவள் விஷயமாக விரோதித்துப் பேச பாதுஷாவின் தேவி மும்தாஜ் பேகத்தின் சகோதரியான அவருடைய முதல் மனைவிக்கும் உரிமை கிடையாது. செல்வாக்கும் இல்லை.

திவான் ஒன்றும் தெரியாதவர் அல்லர். அவ்விடத்துச் சூழ்ச்சிகள் எல்லாவற்றையும் அவர் அறிவார். அவர் வேண்டுமென்று தான் அவ்விதம் கூறினுர். இளவரசன் அவருடைய யோசனையை அங்கீகரித்துச் சம்மதித்தாலும் அதன்படி நடக்க அவர் சிறிதும் தயாராக இல்லை.

சூழ்ச்சியைச் சூழ்ச்சியாலேயே வெல்ல வேண்டும். அதனலேயே அவர் அந்த முறையைக் கையாண்டார். இந்த விஷயம் மீர்கலீல் கானுடைய காதுக்கு எட்ட வேண்டும் என்பது ஒன்றே அவர் நோக்கம். அதுவும் நிறைவேறி விட்டது,

பெரிய இடங்களில் சமாசாரங்களைச் சேகரித்துச் சொல்வதற்கென்றே சிலர் இருப்பது சகஜம். அவர்கள் சுபாதாருக்கும் திவானுக்கும் மிடையில் நடந்த சம்பாஷணையை மீர் கலீலுக்கு அறிவித்து விட்டார்கள்.

பாவம், அதுவரையில் அவருக்கு இது விஷயம் ஒன்றுமே தெரியாது. அவர் அறியாமலேயே இவ்வளவும் நடந்தன. அதைக் கேட்ட அவர் முதலில் ஆத்திரம் கொண்டு குமுறினர், கத்தினுர். ஆயினும் அதன் விளைவு என்னவாகும் என்பதை அவர் நிச்சயம் அறிவார்.

முரட்டுப் பிடிவாதம் கொண்டவன் அவுரங்கஜேப். அவன் ஒன்றை நினைத்து விட்டால் அதைச் செய்து முடிக்காமல் வேறு வேலை பார்க்கமாட்டான். மேலே செய்ய வேண்டியது என்ன ?

திவான் இருவருக்கும் சமாதானம் செய்து வைக்கப் பேச்சுவார்த்தை நடத்தினுர். அவற்றை நாம் கூற வேண்டிய அவசியம் இல்லை. கடைசியாகச் சிற்றப்பனும் மகனும் தங்களுக்குள் ஒவ்வொருவரும் ஓர் அடிமையைப் பரிவர்த்தனை செய்து கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. சத்தர்பாய் என்னும் அடிமையைக் கொடுத்து அவளுக்குப் பதிலாக ஹீரா பாயை அடைந்தான் அவுரங்கஜேப்.

* * * * *

“ஹீரா, உன் சொல்லுக்காக இந்த ஒரு தடவை மட்டும் அதைக் குடிக்கிறேன். இனிமேல் இவ்விதம் செய்ய வேண்டுமென்று நீ என்னைக் கேட்கக் கூடாது” இவ்விதம் அவளை வேண்டினுன் அவுரங்கஜேப்.

இவ்வளவு கஷ்டப்பட்டு அடைந்த காதற் கிழத்தியை இழந்துவிட அவனுக்குப் பொறுக்கவில்லை. அவள் மேல் கொண்ட மையலால் மதியிழந்து தன் விரதத்தைப பங்கம செய்து கொள்ளவும் இசைந்தான் அவன்: அவள் கொடுத்த மது பானத்தை அருந்தாவிட்டால் அவள் மனம் திருபதியடையாது. ஆகவே மதுபானம் செய்து விடுவது என்றே தீர்மானித்தான்.

ஹீராவோ அவன் வேண்டுகோளுக்கு மறுமொழி சொல்லவில்லை. ஆனல் பதிலாக மதுக் கிண்ணத்தை வளைகள் குலுங்கும் கையால் எடுத்து அவன் வாயருகில் கொண்டு சென்ருள்.

அவுரங்கஜேப் ஒரு கணநேரம் பேசாமல் கண்களைக் மூடிக் கொணடிருந்தான். மறுபடியும் அவன் மனத்துள்ளே ஒரு பூசல்: அவனுடைய விரதப் பான்மை சிறிது தலைதூக்கியாடியது. ஆயினும் கடைசியில் அதற்குத் தோல்வியே. காதலுக்கு முன் எதுதான் நிற்கமுடியும்? எரிநது சாம்பலாகிவிடாதா?

கண்ணைவிழித்தான். வேறொன்றும் பேசவில்லை. அந்த மதுக் கிண்ணத்தைக் கையால் வாங்கி தானே குடிக்க முற்பட்டான். அவுரங்கஜேப் ஆயினும் அவனைக் குடிக்கவிட்டாளோ அவள்.

கிண்ணம் உதட்டருகில் வந்து விட்டது. ஹீரா அதுவரையில் அவனையே பார்த்துக்கொண்டிருந்தவள் திடீரென்று முன் வந்து அந்தக கிண்ணத்தை அவன் கையினின்றும் பிடுங்கினுள்.

திடுக்கிட்டுத் திரும்பினுன் அவுரங்கஜேப். சைத்தானை அழிக்க அல்லாவின் திருவுள்ளம் ஏற்பட்டதோ என்ற சந்தேகம் கொண்டான். அவன் மனசு கொஞ்சம் ஆனந்தமும் அடைந்தது.

“தாங்கள் என் மேல் கொண்டுள்ள காதலின் ஆழத்தைப் பரிசோதித்துப் பார்கக விரும்பினேனேயல்லாமல், தாங்கள் பாபம் என்று கருதும் செயலைச் செய்ய வேண்டும் என்று ஆசைப்படவில்லை.”

புன்னகை தவழ நின்றுகொண்டிருந்தாள் ஹீரா. அவளும் மனித உள்ளம் படைத்தவளே. மிருகத் தன்மை வாய்ந்தவள் அல்ல. அவள் காதலின் சக்தியை அறியவே விரும்பினுள். மனிதனைப் பாப கர்மா செய்யச் சொல்லித் தூண்டுவதால் அவளுக்கு என்ன லாபம்? இளவரசன் தன் காதலுககுப் பணிந்து விட்டான் என்ற செய்தி அவளுக்குப் பேரானந்தத்தைக் கொடுத்தது. அவள் விரும்பியது அது ஒன்றுதான். அது நீங்காத காதலாக இருக்கும் என்பதை அவள் அறிவாள்.

வசீகரமான

சருமத்தை

ஏன் பெறலாகாது?



தினசரி இரவு தவருமல் இரண்டு பைல்பீன்ஸ் உட்கொண்டுவந்தால், சுத்தமும், குற்றமுமற்ற சருமத்தைப் பெறலாம். இதுவே உள்ளூர ஆரோக்யத்தை வெளிப்படுத்தும் வெளிப்புற அழகு சாதனமாகும். பைல்பீன்ஸ் சுத்த தாவர சத்து. சரீரத்தை சீர்படுத்தி, ரத்தத்தை சுத்தம் செய்து, தினசரி உணவு அசுத்தத்தை வெளிப்படுத்தும்.! இதனல் மேலான ஆரோக்யம், அழகியசௌந்தர்யம் பெறலாம்.

எல்லாமருந்து வியாபாரிகளும் பைல்-பீன்ஸ் பாட்டில் ரூ. 1வீதம் விற்கின்றனர்

BILE BEANS

பைல்பீன்ஸ் இருமடங்கு வசீகரமாகச் செய்யும். (15)

யுவதியின் சபதம்

★ ★ **ஸ்ரீ ப்ரேம் சந்த்** எழுதியது

மஹாராஜா யஸ்வந்த் சிங்கின் மகன் ப்ருதிவி சிங், அழகில் சிறந்தவன். வித்தையில் நிபுணன். ஈரான், மிஸர், ஸ்யாம், முதலிய தேசங்களைச் சுற்றி வந்தவன். பல பாஷையில் பாண்டித்தியமுடையவன். அவனுக்கு ராஜநந்தினி என்ற பெயருடைய சகோதரி ஒருவள் இருந்தாள். அவளும் நல்ல ரூபவதி. நல்ல பாண்டித்தியமுடையவள். குரலும் குயிலைப்போலிருக்கும். யாரையும் மனம் நோகும்படி சொல்லமாட்டாள். தகப்பனார் தன்னை விட்டுப் பிரியச் சகிக்க மாட்டாள். தகப்பனார் ஏதாவது தவ்றுதலாக நடந்தால், அவள் அவரைக் கண்டிப்பது வழக்கம்,

தர்ம சிங்குடன் அவளுக்குக் கலியாணம் நடந்தேறியது. அவன் சிறிய ஊர் அதிகாரியும் யஸ்வந்த் சிங்கின் தலைமை சேனாதிபதியுமாவன். தர்ம சிங் உதாரகுணமுடையவன். மேலும் போரில் நல்ல தேர்ச்சியுடையவன். அந்தக் காரணத்தால்தான் ராஜநந்தினியை மஹாராஜா யஸ்வந்த் சிங் அவனுக்குக் கலியாணம் செய்து வைத்தார். தம்பதிகள் இருவரும் உள்ளூரக காதல் கொண்டிருந்தார்கள், தர்ம சிங் அதிகமாக ஜோத்பூரில் தான் இருப்பான். ப்ருதிவிசிங் அவனுடைய ஆத்ம நண்பன். அவர்கள் இருவரும் சகோதரரைப்போல் அவ்வளவு நட்புக் கொண்டிருந்தார்கள். அவர்களைப்போலவே அவர்கள் பத்தினிகளும்! அவர்கள் இருவரும் ஒருவருக்காக மற்றவரின் உயிரையும் தியாகம் செய்யச் சித்தமாயிருந்தார்கள்.

ப்ருதிவி சிங் மனைவி துர்க்கா குமாரி நல்ல அழகி. மேலும் கெட்டிக்காரி. அவளும் ராஜநந்தினியும் ஒருவரை ஒருவர் பிரியாத சிநேகிதிகள். இருவருக்கும் ஸமஸ்கிருத பாஷையின் மேல் அளவு கடந்த அன்பு!

ஒரு நாள் ராஜகுமாரிகள் இருவரும் தோட்டத்தில் உட்கார்ந்திருந்தார்கள். அப்பொழுது வேலைக்காரி ஒருவள் வந்து ராஜநந்தினியிடம் ஒரு காகிதத் துண்டைக் கொடுத்தாள். ராஜநந்தினி அதைப் பிரித்துப் பார்த்தாள். அது ஸம்ஸ்கிருதத்தில் எழுதியிருந்தது. அதைப் படித்து விட்டு, வேலைக்காரியிடம் கடிதத்தைக் கொடுத்தனுப்பியவரை உள்ளே அனுப்பும்படிக் கட்டளையிட்டாள். சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு பெண் தலையில் இருந்து கால்வரை துணியால் மூடிக்கொண்டு அவர்கள் முன் வந்து நின்றாள். அவளுக்கு இருபத்தைந்து வயதிருக்கும், ஆனால் அவள் மாநிறமாயிருந்தாள். கண்கள் பெரிதுபெரிதாயிருந்தன, பேச்சிலும் நடையிலும் வசீகரத் தன்மையிருந்தது. ஏதோ ஒரு கஷ்ட தசையினால் தான் அவள் அப்படி ஆகியிருக்கலாம் என்று அனுமானத்தில் தெரிய வந்தது. அவள் ராஜகுமாரிகளை ஆசிர்வதித்து அவர்கள் பக்கத்தில் உட்கார்ந்தாள். ராஜநந்தினி அவளைத் தலை முதல் கால் வரை ஏற இறங்கப் பார்த்து "உன் பெயரென்ன?" என்று கேட்டாள்.

"வஜ்ர விலாஸினி!" என்றாள் அவள்,

"உன் வீடு எங்கேயிருக்கிறது?"

"இங்கிருந்து மூன்று நாள் பிரயாணத்தில் விக்ரம்நகர் என்றிருக்கிறது. அதில் தான் என் வீடு."

"ஸமஸ்கிருத பாஷையை எங்கே கற்றுக் கொண்டாய்?"

"என் தகப்பனார் ஸமஸ்கிருதத்தில் நல்ல பாண்டித்ய முடையவர். அவரிடத்தில் தான் நான் கற்றுக் கொண்டேன்."

"உனக்குக் கலியாணமாகி விட்டதல்லவா!"

கலியாணம் என்றதைக் கேட்டதும் வஜ்ரவிலாஸினியின் கண்களில் நீர் ததும்பியது. அவள் தன் துக்கத்தை அடக்கிக் கொண்டு "இதற்குப் பதில் வேறு ஒரு சமயத்தில் சொல்லுகிறேன். என்னுடைய கதை மிகவும் துக்ககரமானது. அதைக் கேட்டால் நீங்களும் வருத்தம் அடைவீர்கள். அதனால் இந்த சமயம் மன்னிக்கவும்" என்றாள்.

> மொழிபெயர்த்தவர்
> வெங்கடேசன்

அன்றிலிருந்து வஜ்ரவிலாஸினி அங்கேயே தங்கி விட்டாள். ஸமஸ்கிருத சாஹித்தியத்தில் அவளுக்கு அதிகப் பாண்டித்தியமிருந்தது. அவள் தினமும் ராஜ குமாரிகளுக்கு கதை, கவிதை முதலியவைகளைப் படித்து அர்த்தமும் சொல்லுவாள். அவளுடைய அழகிலும் பாண்டித்தியத்திலும் சிறிது சிறிதாக ராஜ குமாரிகளுக்கு அதிக அன்புண்டாயிற்று. ராஜ குமாரிகள் இருவரும் வஜ்ரவிலாஸினியைப் பிரிவதே இல்லை.

2

குமார் ப்ருதிவி சிங்கும், தர்ம சிங்கும் மகாராஜாவுடன் ஆப்கானிஸ்தானத்திற்குப்போய் பல மாதங்கள் கழிந்தன. ராஜ குமாரிகள் தினமும் 'மேக தூதம்' 'ரகுவம்சம்' முதலியவைகளைப் படித்துக் கொண்டிருந்தார்கள். வஜ்ரவிலாஸினிக்குக் 'காளிதாஸ'னுடைய கவிதையில் அதிகப் பிரேமை. அவள் காளிதாஸனின் கவிதையிலிருந்து எடுத்துப் பாடும் பாட்டையும் அதன் அர்த்தத்தையும் கேட்டு ராஜ குமாரிகளிருவரும் அப்படியே பிரமித்து விடுவார்கள்.

மாலை நேரம். ராஜகுமாரிகள் இருவரும் தோட்டத்தில் உலாவச் சென்றனர். வஜ்ரவிலாஸினி, புல் தரை மீது உட்கார்ந்து அழுதுகொண்டிருப்பதைப் அவர்கள் இருவரும் பார்த்து விட்டார்கள். ராஜகுமாரிகளின் அன்பு நிறைந்த சொற்களாலும் செயல்களாலும் அவள் தன் கவலையை ஒருவிதமாக மறந்திருப்பாள். அவள் தானும் ஒரு 'ராஜகுமாரி' என்றே நினைத்துக் கொள்வாள். ஆனால் அவை ஒருபுறம் இருக்க, அவள் ஏகாந்தமாக யிருக்கும் பொழுதெல்லாம் எதையோ நினைத்துக் கொண்டு வருத்தப்படுவாள். அவள் மனதில் அடக்க முடியாத வேதனை ஒன்று இருந்து வந்தது. ராஜ குமாரிகள் இருவரும் அவள் கண்கலங்கி இருப்பதைப் பார்த்து அவளருகில் உட்கார்ந்தார்கள். ராஜ நந்தினி அவளைத் தன் மார்பில் சாத்திக் கொண்டு கண்களைப் புடவைத் தலைப்பால் துடைத்து "தோழி. உன் மனதில் இருப்பதை இன்னமும் எங்களுக்குச் சொல்லமாட்டேன் என்கிறாயே? இப்பொழுது நாங்கள் என்ன வேற்றவர்களா? உன்னுடைய தனிப்பட்ட கவலையை எங்களால் பார்க்க முடியவில்லை" என்றாள்.

வஜ்ரவிலாஸினி தன்னைச் சமாளித்துக் கொண்டு "நான் நிர்ப்பாக்கியவதி அம்மா!—என்னுடைய கதையைக் கேட்காதே" என்றாள்,

"நீ உன் முழு விவரங்களைச் சொல்லா விட்டாலும் நான் கேட்கும் ஒரு கேள்விக்காகிலும் பதில் சொல்"

"கேளுங்கள்—சொல்லுகிறேன்"

"அதுதான்! நான் முன்பு ஒரு நாள் கேட்டேனே—கலியாணமாகிவிட்டதா?"

"என்ன பதில் சொல்லுவது?—இல்லை!"

"யாருடைய காதல் பாணமாவது உன் மனதில் பாய்ந்திருக்கிறதா?"

"இல்லை அம்மா—கடவுள்றிய இல்லை."

"அப்படியானால் நீ ஏன் இப்படிச் சஞ்சலப்பட்டுக்கொண்டிருக்கிறாய்? காதலின் இன்பத்தைப் பருக உன் மனம் எண்ணுகிறதா?"

"இல்லை. வருத்தத்தைத் தவிர என் மனதில் காதலுக்கு இடம் ஏது!"

"நாங்கள் உன் மனதில் காதலுக்காக இடத்தை உற்பத்தி செய்து தருகிறோம்"

வஜ்ரவிலாஸினி அவளுடைய ஜாடையை அறிந்துகொண்டு" அம்மா, இந்த விஷயங்களில் வாதாட வேண்டாம்" என்றாள்.

"உன் கலியாணத்திற்காக ஏற்பாடு செய்யட்டுமா? திவான் ஜயசந்திரரைத் தெரியுமா?"

வஜ்ரவிலாஸினி கண்ணீர் நிறைந்த குரலில் "அம்மா, நான் ஒரு பிரதிக்ஞை எடுத்துக் கொண்டிருக்கிறேன். அதைக் காப்பாற்றுவது தான் என் வாழ்க்கையின் லட்சியம். நான் என் சபதத்தை நிறைவேற்றுவதற்காகவே உயிர்வாழ்கிறேன். இல்லாவிட்டால் எனக்கு நேர்ந்த ஆபத்துகளினால் நான் உயிர் வாழ எண்ணியே இருக்க மாட்டேன். என் தகப்பனார் விக்ரமநகரத்தின் ஜாகீர்தார். என்னைத்தவிர, அவருக்கு வேறு சந்தானமில்லை. அவர் என்னைத்தன் உயிரினும்மேலாகக் காப்பாற்றினார். எனக்காகவே அவர் ஸமஸ்கிருத பாஷையைக் கற்றார். போர் புரிவதில் அவர் கை தேர்ந்தவர்.

"கோவர்த்தன தினத்தன்று மாடுகள் எல்லாம் காடுகளுக்குச் சென்று, மாலை திரும்பி வந்து கொண்டிருந்தன. நான் என் மாளிகையின் வாசலில் நின்று கொண்டிருந்தேன். அச்சமயம் இடுப்பில் வாளுடனும் நல்ல உடையுடனும் ஒருவன் வந்து கொண்டிருந்தான். என் அருமைப் பசு 'மோகினி' காட்டிலிருந்து அந்த சமயம் வந்து கொண்டிருந்தது. அதன் கன்று இப்படியும் அப்படியுமாகத் துள்ளிக் குதித்துக்கொண்டிருந்தது. கன்று அந்த வாலிபன் மீது மோதிக்கொண்டது: பசு அவனைப்பார்த்துச் சீறியது. அவனும் பெருத்த முரடனாகயிருந்தான். அச்சமயம் நான் கொஞ்சம் யோசித்துத் தடுத்திருந்தால் அவ்விதம் நடந்திராது. சட்டென்று அவன் கத்தியை உருவி, பசுவின் மீது வீசினான். என் கண்முன்னால் அந்த க்ஷத்திரியன் என்னுடைய பசு மோகினியை வெட்டி விட்டான். அதைப் பார்க்க ஜனங்கள் கூட்டம் கூடிவிட்டார்கள் மேலும் அவனை ஏசிப்பேசினார்கள். அதே சமயம் என் தகப்பனாரும் வந்து, மஹாலின் முன் ஜனங்கள் தேர் திரு நாள் போலக் கூடியிருப்பதைக் கண்டார். பசு துடித்துக் கொண்டிருந்தது, அதன் கன்று பக்கத்தில் நின்று, கதறிக்கொண்டிருந்தது. தகப்பனார் விஷயத்தைக்கேட்டுபசுவைப்பார்த்ததும் அவருக்குக் கோபம் வந்து விட்டது. என்னைப்போல அவருக்கும் அந்தபசுவின் மேல் அதிக அன்பு. அவர் கதறிக்கொண்டே என் பசுவை யார் வெட்டியது என்று கேட்டார். அந்த வாலிபன் வெட்கத்தால் தலை குனிந்து கொண்டு 'நான் என்றான்.'

"நீ க்ஷத்திரியனா?"

'ஆமாம்!'

'அப்படியானால் யாராவது க்ஷத்திரியர்களிடம் உன் கைவரிசையைக் காண்பிப்பது தானே.'

"அதைக் கேட்டதும் அந்த வாலிபனுடைய முகம் சிவந்து க்ஷத்திரினாகயிருப்பவன் யாராயிருந்தாலும் என முன் வாருங்கள்' என்றான். ஆயிரம் பேருக்கு மேலிருந்த அந்தக் கும்பலில் இருந்து ஒருவரும் முன்னுக்குக் காலடி எடுத்து வைக்க வில்லை. அதைப் பார்த்து என் தகப்பனார் கையில் கத்தியை உருவிக் கொண்டு முன்னுக்கு வந்தார். அவனும் கத்தியை உருவிக் கொண்டான். இருவர் வாள்களும்

(அடுத்த பக்கம் பார்க்க)

நாடகம்

உத்தம வீரன்

★ **ஓ. கணபதி அப்பன்** எழுதியது

முதல் காட்சி

கிருஷ்ண தேவராயர் சபை—

கிருஷ்ண தேவராயர்:—ப்ரதான்! வீர சேகர 'சோழனைத் தண்டித்து, அவன் சந்திர சேகர பாண்டியனிடமிருந்து அநீதியாகக் கைப்பற்றிய நாட்டைத் திரும்பப் பாண்டியனிடம் சேர்ப்பித்து வரும்படி, நாகம்ம நாயக்கரை நாம் அனுப்பியிருக்க, அவர் சோழனைத் தண்டித்து விட்டு, இன்னும் பாண்டியனிடம் நாட்டை ஒப்புவிக்காமலிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். என்ன தைரியம்!

ப்ரதான்:—மஹராஜ்! நாகம்ம நாயக்கர் சம்பந்தப்பட்டவரை ஏதாவது சரியான முகாந்தரம் இருக்க வேண்டும்.

கி. தே:—எக்காரண மிருந்த போதிலும் நம் கட்டளையை மாற்ற அவருக்கு அதிகார முண்டா—செய்தது பெரும் பிழையே.

ப்ரதா:—சற்று நிதானிக்க...

கி. தே:—வேண்டியதில்லை—இது ராஜத்ரோகமே—அவனைப் பிடித்து வந்து சிரச் சேதஞ் செய்யாவிடில் இனி நமக்குப் பகைவர் பயம் நீங்காது.

விஸ்வநாத நாயக்கர். (சோகத்தால் தொண்டை யடைக்க):—சிரச்சேதம்—பெருந் தண்டனை—மஹாராஜா! அவர் இதுவரை நம் சமஸ்தானத்தில் எவ்வளவு உண்மையுடன் உழைத்திருக்கிறார், எவ்வகையிலும் மஹாராஜா மனங் கோணாது, மெய்க் காப்பாளராகவும், பொக்கிஷதாராகவும், சேனைத் தலைவராகவும் சேவை புரிந்திருக்கிறாரே— இவைகளைச் சிறிதாவது எண்ண வேண்டாமா?

கி. தே:—ஓஹோ! பிதாவுக்காகப் பரிந்து பேச வந்து விட்டாரோ விஸ்வநாத நாயக்கர்!—உம்! (கோப நகை)—நம்பிக்கைத் துரோகம், என்றும் மன்னிக்கப்பட மாட்டாது—யார் போய்க் கொண்டு வருகிறீர்கள் அவரை? (சபையில் மௌனம்) என்ன ஒருவரும், முன் வரவில்லை? விஜயநகரத்தின் வீரப் ப்ரதாபம் நாகம்மனுடைய நன்கொடைதானா!—அவரில்லையென்றால் இவ்வரசும் இல்லை போலும்—புறப்படுங்கள் யாராகிலும்! (மௌனம்) கோழைத்தன்மா அல்லது சதியாலோசனையா உங்களுடைய மௌனத்திற்குக் காரணம்? கடைசியாய்க் கேட்கிறேன்—நாகம்ம நாயக்கனைக் கைதி செய்து நம்முன் கொண்டு வரும் வல்லமையுள்ள வீரன் ஒருவருமில்லையா இச்சபையில்?

விஸ்வ:—ஏன் இல்லை? நான் கொண்டு வருவேன்.

கி-தே:—சபாஷ்! விஸ்வநாதா?—வேண்டிய சேனைகளை உன்னுடனழைத்துச் சென்று வெற்றியுடன் திரும்பு, இன்னும் பத்துத் தினங்களுக்குள் அவன் சிரம் உடலினின்றும் துண்டிக்கப்பட வேண்டும். [எழுந்து செல்கிறார்—விஸ்வநாத நாயக்கரும் எழுந்து ஒருவருடனும் பேசாது போகின்றார்]

இரண்டாம் காட்சி

அரண்மனை

நாகம்ம நாயக்கரின் மனைவி சொக்கம்மாள் அரசரைக் காண வருகிறாள்-முதலறையில் மந்திரியைப் பார்க்கிறாள்.

சொ:—(அழுகையுடன்) ஐயா! பிரதானியவர்களே! நான் மஹாராஜாவைப் பார்க்க வேண்டும்.

ப்ர:—அம்மா, வாருங்கள்—என்ன, இப்படித் தங்கள் குமாரர் தன பிதாவையே கைதியாக்குவதாக ஒப்புக் கொண்டார்.

சொ:—என் தலைவிதி! அறியாதவன் அன்றோ. ஏதோ ஆத்திரத்தில் முன் வந்திருக்கலாம்;

ப்ர:—ஆமாம். 'இச்சபையில் வீரர் ஒருவருமில்லையா' வென்று அரசர் கேட்டதும் இவருக்கு ரோஷம் ஏற்பட்டுவிட்டது—அரசரை ஏன் காணப் போகிறீர்கள்?

சொ:—என் பர்த்தாவுக்காக நான் நேரில் மன்னிப்புக் கேட்டுப் பார்க்கிறேன்.

ப்ர:—நானும் எவ்வளவோ நியாயம் எடுத்துக் கூறினேன். அவர் ஏனோ ஒரே பிடிவாதமாயிருக்கிறார்—ஊம். தாங்களும் கேட்டுப் பாருங்களேன். (அழைத்துச் செல்கிறார்)

மூன்றும் காட்சி

கிருஷ்ண தேவராயர் தனி யறை.

சொ:—அரசே! எங்களைத் திடீரென இவ்வாறு திரஸ்கரிக்க உங்கள் மனம் எப்படித் துணிந்தது.

கி-தே:—அம்மா! என் செய்வது? நீதி அப்படியிருக்கிறதே.

சொ:—தங்களுடைய மூதாதையர்காலத்திலிருந்தே நாங்கள் இந்த அரசாங்கத்தில் ஒரு குற்றமும் இல்லாமல் இருந்துவருகிறோம் தங்களைக் குழந்தையில், தூக்கிச் சுமந்து, தாலாட்டி வளர்த்தவள் நானல்லவா? அதை நினைத்தாவது எங்கள் மீது மனமிரங்கலாகாதா.

கி-தே:—வாஸ்தவம். தாங்களென்னை வளர்த்த தாய்தான். தங்கள் குமாரன் நீதியில்லா அரசன் என்று தங்கள் காதாரக்கேட்டு மகிழச் சம்மதிக்கிறீர்களா?

சொ:—அப்படிப்பட்ட அவசியம் என்ன ஏற்பட்டுவிட்டது.

கி-தே:—ராஜத்துரோகிகளுக்கு மரண தண்டனை என்று ஏற்பட்டிருக்கிறதே.

சொ:—நாங்கள் என்றும் தங்களுக்குத் துரோகஞ் செய்ய எண்ணுபவர்கள் அல்லவே.

கி-தே:—இல்லை. நாகம்ம நாயக்கர் நமக்கு விரோதமாகப் புரட்சிப்படை திரட்டுவதாக சந்திரசேகரபாண்டியனிடம் இருந்து கடிதம் வந்திருக்கிறது.

சொ:—அரசே! இதை நம்பாதீர். முற்றிலும் பொய்யான விஷயம்.

கி-தே:—ஒரு நாளும் இல்லை—நன்கு யோஜித்தே முடிவு செய்திருக்கிறேன். வீணாய் வாதிப்ப

யுவதியின் சபதம்

(முன் பக்கத்தொடர்ச்சி)

உராய்ந்தன. என் தகப்பனார் கிழவர். மார்பில் கொஞ்சம் அடிபட்டது.—கீழே விழுந்து விட்டார். அவரை ஜனங்கள் மஹாலுள் எடுத்து வந்தார்கள். அவருடைய முகம் வெளுத்து விட்டது. ஆனாலும் அவர்கண்களிலிருந்து அந்தக் கோபக் குறி மாத்திரம் மாறவேயில்லை. நான் அழுது கொண்டே அவர் முன் வந்தேன். என்னைப் பார்த்ததும அவர் பக்கத்தில இருந்தவர்களை விலகிப் போகும்படி சொன்னார். பிறகு நானும என் தகபனாரும் தனிமையாயிருந்தோம். அச்சமயம் அவர் "அம்மா நீயும் க்ஷத்திரியப் பெண் தானே"? என்று கேட்டார். ஆமாம் என்றேன் நான்.

"க்ஷத்திரியப பெண்கள் தன் வாக்கைப்பூர்த்திசெய்வார்களா?

"கட்டாயம் செய்வார்கள்"

"இந்த க்ஷத்திரியன் என் பசுவின் உயிரை வாங்கி விட்டான். அவன் உயிரை நீ வாங்கி விட வேண்டும்"

"தங்களுடைய வாக்கைப் பூர்த்தி செய்வேன்"

"என் மகன் பிழைத்திருந்தால் இந்த கஷ்டத்தை உன் தலை மீது சுமத்தியிருக்க மாட்டேன்.'

"தாங்கள் என்ன உத்தர விடுகிறீர்களோ, அதை நான் கட்டாயம் செய்தே தீருவேன்'

"நீ சபதம் செய்வாயா?"

"கட்டாயம்"

"இந்தச் சபதத்தைப் பூர்த்தி செய்து காண்பிப்பாயா?"

"என்னால் முடிந்த வரைக் கட்டாயம் செய்தே தீருவேன்"

"இதோ இந்தா கத்தி. நீ என்றைக்கு அந்த க்ஷத்திரியனை இந்தக் கத்தியால் உலகத்திலிருந்து அகற்றுகிறாயோ, அது வரை நீ சிற்றின்ப விஷயத்தில் இறங்கக் கூடாது' என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே அவர் பிராணன் உடலை விட்டு நீங்கி விட்டது.

"நான் அன்று முதல் கத்தியைத் துணியில் சுற்றி மறைத்துக்கொண்டு அந்த ராஜகுமாரனைத் தேடுவதில் முனைந்து விட்டேன். பல வருஷங்கள் சென்றன. நான் அநேக ஊர்களுக்கும் போனேன். காடுமலை முதலிவைகளிலும் சஞ்சரித்தேன். ஆனால் அந்த வாலிபனைக் காணவில்லை. நான் ஒரு நாள் இடிந்த சுவர் ஒன்றின்மீது உட்கார்ந்து அழுது கொண்டிருந்தேன். அந்த வாலிபனைப்போல் ஒருவன் வந்தான். சற்றேறக்குறைய அவனைப்போலவேதான் இருந்தான். அவன் என்னைப் பார்த்து 'யார் நீ?' என்று கேட்டான்: 'நான் ஒரு நிர்ப்பாக்கியவதி. என்மீது தயவு வைத்து ஏதாவது சாப்பிடக்கொடுங்கள்' என்று கேட்டேன். 'நல்லது என்னுடன் வா' என்றான்.

"நான் எழுந்து நின்றேன். அந்த வாலிபன் நிலை தடுமாறிக் கொண்டிருந்தான். உடனே நான் மறைத்து வைத்திருந்த மின்னலைப் பழிக்கும் கத்தியை எடுத்து அவன் மார்பில் குத்தி விட்டேன். அதற்குள்ளாக அங்கே யாரோ வருவது போல் தெரிந்தது. நான் கத்தியை விட்டு விட்டு ஓடத்தலைப்பட்டேன். மூன்று வருஷங்கள் வரை காட்டிலும் மலையிலும் மறைந்து மறைந்து அலைந்தேன். பல தடவை ஏதாவது ஆற்றிலோ குளத்திலோ விழுந்து உயிரை மாய்த்துக்கொள்ளலாம் என்றும் நினைத்தேன். ஆனால் உயிர் அற்புதமானதாக இருக்கிறது. இதுவரை எனக்குத் தெரியாமல் யார் யாரைக் கெடுத்திருக்கிறேனோ. இன்னும் யாரைக்கெடுக்க உயிர் வாழ்கிறேனோ அது தெரியாது! கடைசியாக ஏதோ ஒரு முடிவுக்கு வந்து ஜோத்பூருக்கு வந்தேன். அங்கே உங்களுடைய தயாள குணங்களைப்பற்றிக் கேள்விப்பட்டேன். தங்களுடைய பணிவிடைகளில் கலந்து கொண்டேன், உங்களுடைய தயவினால் என் வாழ்க்கை நன்றாக நடந்துகொண்டிருக்கிறது. இது தான் என் கதை" என்றாள்.

ராஜநந்தினி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு "உலகத்தில் இப்படிப்பட்ட மனிதர்களும் இருக்கிறார்களா? போகட்டும் உன் கத்தியால் அவனைச் சரிப்படுத்தி விட்டாயா?" என்று கேட்டாள்.

"எங்கே அம்மா? அவன் பிழைத்து விட்டான். சிறிது காயம் தான் ஏற்பட்டிருக்கும். அவனைப்போலவே அடையாளமுள்ள ஒரு வாலிபனைக் காட்டில் வேட்டையாடும்போது பார்த்தேன். அதே மனிதன் தானோ என்னவோ தெரியாது"

(தொடரும்)

தில் பிரயோஜனமில்லே. (போகிருர்.)

சொ:—ஹா ஐயோ! (கீழே விழுகிருள்.)

ப்ரதான்:—(ஓடி வந்து பார்த்து) மூர்ச்சையாய் விட்டார்கள்–யாரங்கே? (அரண்மனைத் தாதிகளை வரவழைத்து) இவர்களைப் பந்தோபஸ்தாக எடுத்து வீடு சேருங்கள்.

நான்காம் காட்சி

நாகம்ம நாயக்கரின் மாளிகை

[சொக்கம்மாள் துக்கசாகரத்தில் மூழ்கிக் கிடக்க மருமகள் விஜயாள் ஆஸ்வாசப்படுத்துகிருள்.]

வி:—மாமி, இக்கஞ்சியை மட்டும் சாப்பிட்டு விடுங்கள். மிகவும் களைத்துப் போயிருக்கிறீர்கள்.

சொ:—கண்ணே! இப்போது ஒன்றும் வேண்டாம். உன் கணவன் வரட்டும்-அவனையே கேட்கிறேன்—அவன் எப்படி இவ் விஷயத்துக்குச் சம்மதித்தான். [அடுத்த அறையில் நாற்காலி இழுக்கும் சப்தம்]

வி:—வந்துவிட்டார் போலும் [சொக்கம்மாள் எழுந்து போகிருள்]

ஐந்தாம் காட்சி

விஸ்வநாத நாயக்கர் அறை

விஸ்:-(நிம்மதியின்றி) சீச்சி, எல்லோரும் என்னைப் பற்றி இகழ்ச்சியாய்ப் பேசிக்கொள்கிருர்களே–பெற்ற தகப்பனைக் கொன்று பெரும்பதவி பெறலாமென்று நினைத்தேனென்கிருர்களே! வீண் அபவாதம்.

சொ:—ஹா! மகனே! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்.

விஸ்:-(கண்ணில் நீர் ததும்ப) அ-ம்-மா-அ-ம்-மா-த-ப்-பி தம் ஊம்-இல்லே-இல்லே-இது அரச கட்டளை.

சொ:—(அழுது கொண்டே) இக்கட்டளை உன்னுல் தானு நிறைவேற்றப்பட வேண்டும்.?

விஸ்:—அம்மா! நானும் ஒரு வீரன் அல்லவா?

சொ:—அப்பா விஸ்வநாதா! உன் பிதா ஓர் பிள்ளை வேண்டும் என்று என்னென்ன தான தர்மங்கள் செய்தார். எங்கெந்த க்ஷேத்திரங்களுக்கெல்லாம் சென்றுர்.

விஸ்:—அதுதான் நான் பிறந்தேன்.

சொ:—காசி விஸ்வநாதர் தரிசனம் செய்து வந்ததும் நீ பிறந்ததால் அவர் பெயரையே உனக்கு வைத்தார்.

விஸ்:—ஆம், அதுதான் பெற்றோர் அன்பு-

சொ:—அப்பா! அப்பெற்றோரிடம் உனக்குள்ள பிள்ளையின் அன்பு எங்கப்பா சென்றது?

விஸ்:—அவ்வன்பு அரச ஆணைக்குப் பயந்து கோழைத்தனத்துடன் ஓடி ஒளிந்தது.

சொ:—விஸ்வநாதா! வேண்டாம். நமக்கிந்த அரசாங்க உத்தியோகம்—இதோ பார்; உன் தந்தை உயிர் நீத்தால் உன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற இப்பேதை உயிர் தரிப்பேனே.

விஸ்:—என் தந்தை உயிர் நீப்பாரென்பது என்ன நிச்சயம்!

சொ:—(ஆத்திரத்துடன்) ஆயின் நீ அவரைக் கைது செய்யப் போகமாட்டாய் என்று சொல்லேன்.

விஸ்:—அது தவறு,

சொ:—பின்!

விஸ்:—அவர் என்ன என்னிலும் திறமை குறைந்தவரா—இவ்விஜயநகரச் சேனை முழுதையுமே ஹதஞ் செய்யும் ஆற்றல் படைத்தவராயிற்றே—என் உயிரையே இழக்க நேரினும் நேரும்.

சொ:—அதென்ன அப்படிக் கூறுகிருய்.? உன் உடம்பில் ஒரு வடுப்படவும் சம்மதிப்பாரா அவர்.

விஸ்:—நான் என்றறிந்தால் தானே—இதையெல்லாம் உத்தேசித்தே மாறு வேஷத்துடன் தான் செல்லப் போகிறேன்.

சொ:—ஐயோ! இதென்ன! விலங்கைக் கழற்றிக் குட்டையிலடித்தது போலாயிற்றே. உன்னைமட்டும் எமன் வசம் ஒப்பிக்க நான் இசைவேன் என்று எண்ணுகிருயா?

விஸ்:—அம்மா! சுத்த வீரன் தான் முன் வைத்த காலைப் பின் வாங்கமாட்டான். நான் மேற்கொண்டுள்ளது அரச கட்டளை. அதுவே தெய்வ சித்தமுமாகும். இம்முயற்சியில் நான் வெற்றி பெற வேண்டும் அல்லது உயிர் விட வேண்டும்.

சொ:—அருமைக்குமாரா! உன் இரண்டு தீர்மானங்களும் எனக்குத் தீரா வருத்தத்தைத் தரத்தக்கவைகளே—அப்பா! பெற்றோர் வாஞ்சைக்காக உன் எண்ணத்தை மாற்றிக்கொள்ளலாகாதா?

விஸ்:—அம்மா! வாஞ்சையிலும் கடமை வலியுள்ளதாயிருக்கிறதே.

சொ:—ஆயின் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமையினின்றும் நீ தவறலாமா?

விஸ்:—பொது நலம் சுயநலத்திலும் பெரியதல்லவா? [சேனைகள் புறப்பட முழக்கம்] அம்மணி! சேனைகள் புறப்பட்டு விட்டன விடை கொடுங்கள்.

சொ:—உன் மனவுறுதியால், இவ்வுலகில் உன்னை பெற்றெடுத்த இரு உயிர்கள் அழியப் போகின்றன.

விஸ்:—இவ்வுலகமே அழிவதாயினும் நான் என் கடமையினின்றும் தவறேன். விஸ்வநாதனுல் நம் நாயக்க வம்சத்திற்கே பெரும் புகழுண்டாகட்டும்—(விரைந்து போகிருன்)

சொ:—ஹா! மைந்தா! மைந்தா! (விழுகிருள்)

[விஸ்வநாதன் வராந்தாவில் மனைவியைக் காண்கிருன்]

விஸ்:—விஜயா! இதற்குள் எல்லாம் நீ கேள்விப்பட்டிருப்பாயென்று நினைக்கிறேன்—சென்று வருகிறேன்.

விஜ:—நான் தடை சொல்லவில்லே—ஆனுல் ஒன்று கேட்கிறேன். தங்கள் குடும்பத்திற்கே தாங்கள் பெருந்தீங்கிழைக்க முற்பட்டு விட்டீர்களே.

விஸ்:—இல்லே-ஓர் சுத்த வீரனுடைய செயலைப் புரியவே முனைந்தேன்.

வி:—தங்களுக்கு வீரம்: நம் குடும்பத்திற்கு என்றும் சோகம்—நான் தங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன்—பிராணநாதா! வேண்டாம் இப்பணி.இப்பொழுதே அரசரிடம் சென்று தங்களால் ஆகாதென்று சொல்லி விடுங்கள்.

விஸ்:—நன்கு புகன்ருய்—பெண் பேதமையைக் காட்டி விட்டாயே-மேற்கொண்ட ஒரு காரியம்பற்றிச் செல்லுங்கால் எவ்வித இடையூறுகள் வந்துற்ற போதிலும் தன் நெறி பிறழாது நிற்பவனே உண்மை வீரனுவான். மற்றவன் பெரும் பேடியன்றே. விஸ்வநாதனே அப்பட்டத்திற்காளாவான்-என் காலை விடு. [உதறிக்கொண்டு போகிருன்.]

ஆரும் காட்சி

நாகம்ம நாயக்கன் பாசறை.

நாக;—(தனக்குள்) இப் பாண்டியனின் கர்வம் இன்னும் ஒழிந்தபாடில்லேயே, நாம்ஏன் காத்திருக்கவேண்டும்? நம் அரசரின் அனுமதியின் பேரில் ஓர் பிரதிநிதியை இப் பாண்டி நாட்டிற்கு ஏற்படுத்தி விட்டு நாம் விஜயநகரம் திரும்புவதே உசிதம்.

ஒரு சேவகன்:—(விரைந்து வந்து) எஜமான் விஜய நகரத்திலிருந்து ஒரு பெருஞ்சேனை தங்களைக் கைது செய்வதற்காக வந்திருக்கிறது.

நாக:—விஜய நகரத்திலிருந்தா?

சேவ:—ஆம்.

நாக:—என்னைக் கைது செய்யவா?

சேவ:—ஆமாங்க.

நாக:—யார் தலைமையில் ?

சேவ:—யாரோ ஒரு ராஜ புத்திரவீரன் மாதிரியிருக்கு.

நாக:-சரி—நான் வருகிறேன், (எழுந்து போய் அவ் வீரனைச் சந்தித்து.)யாரையா தாம்-எங்கு வந்தீர்கள்?

விஸ்:—தங்களைக் கைது செய்து வரும்படி மஹாராஜா கிருஷ்ணதேவராயரின் ஆக்ஞை.

நாக:—யாது காரணம்பற்றி?

விஸ்:—ராஜ சித்தம்-யான் கூற அருகன் அல்லன்.

நாக:—நானே புறப்பட்டு வந்து அவரிடம் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்.

விஸ்:—இல்லே-தங்களைக் கைது செய்தே கொண்டு வரும்படி உத்திரவு.

நாக:—என்ன! நாகம்மனைக் கைது செய்வதா? வல்லமையிருந்தால்-ஊம்...செய்துகொள்ளும்,

விஸ்:—ஆக்ஞை- வீரர்களே! ஆகட்டும். [வாள்கள் மோதுகின்றன. 'ஹா! ஐயோ! ஊம்' என்று பலர் மடிகின்றனர்.] இப்பக்கம் வளையுங்கள். அவ் வீரர்களைத் துறத்துங்கள்-உம் விலகுங்கள்-நீங்கள் ஒருவரும் அவரைத் தொடாதீர்கள். நானே கயிற்றை வீசிக் கட்டுகிறேன். (கட்டுகிருன்)

நாக:—ஹா. ஹா! ஒழிந்தது நாகம்மனின் பெருமை. தோள் வலியும் போர்த்திறனும் நிறைந்த வீராதி வீரர்கள் பலர் சேர்ந்த எத்தனையோ சேனைகளையும், ரதகஜதுரகபதாதிகளையும், சண்டமாருதத்தினிடையில் அகப்பட்ட துரும்பு போல் சுழலவடித்த யான் இப்பொழுது ஓர் ரஜபுத்திர வீரனுல் கைதியாக்

—(அடுத்த பக்கம் பார்க்க)

3 காரணங்கள்
501
நாங்கள்
501 ஸ்பெஷல்
உபயோகிப்பது ஏன்?

501 ஸ்பெஷல் அழுக்கு பூராவையும் க்ஷணத்தில் போக்குகிறது. துணிகளைத் தனி வெண்மையாக்குகிறது.

501 ஸ்பெஷலில் துணிகளுக்கு ஹானிகரமான வஸ்துவொன்றுமில்லே. அதன் அபரிமிதமான நுரை மெல்லிய ஆடைகளுக்கு ஒரு கெடுதியும் செய்யாது.

501 ஸ்பெஷல் க்ஷணப்பொழுதில் ஏராளமான நுரையளிப்பதால் வீட்டில் துணிமணிகள் வெளுப்பதை எளிதாக்குகிறது.

மிருகக் கொழுப் பற்றது.

501 ஸ்பெஷலைத்தவிர 501 வாஷிங்ஸோப்பு ஒன்றும் உள்ளது. அதன் விலை இன்னும் குறைவு. நம் வீட்டில் எல்லா அவசியங்களுக்கும் தகுந்த ஸோப்பு. கியூபுகளாகவும், நீளக் கட்டிகளாகவும், வில்லைகளாகவும் சீவல்களாகவும் எல்லாப் பெரிய கடைகளிலும் கிடைக்கும். 501 ஸ்பெஷல் வில்லைகளாக 3 சைஸ்களில் பெட்டிகளில் பாக் செய்து விற்கப் படுகிறது.



டாம்கோ விற்பனை இலாகா :
1, வாரன் ரோட், பீமன்பேட், மைலாப்பூர், மதராஸ்.
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட், டாடாபுரம் & பம்பாய்.
FS. 1947.

சித்திரமும் சிருங்காரமும்

ஷெர்லியின் கருத்து

இந்த வாழ்க்கை ஒரே வேடிக்கை மயமானது, என்கிருள் சிறுமி ஷெர்லி டெம்பிள்.

எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் சந்தோஷிப்பதற்கு இடம் இருப்பதாகவே அவள் கருதுகிருள்.

ஷெர்லிக்கு இப்போது 14-வயதாகிறது. படம் பிடிப்பது, பள்ளிக்கூடத்திற்குப் போவது, ரேடியோ மூலம் பாடுவது, பிரதம சிகிச்சை முறைகளில் பயிற்சி பெறுவது–எல்லாவற்றிலும் ஷெர்லிக்குத் திருப்திதான்.

குழந்தைப் பருவம் முதற்கொண்டே படப் பிடிப்பில் ஈடுபட்டு வந்திருக்கும் இந்தச் சிறுமி தனக்குக் கிடைத்த புகழ் பெருமை ஆகியவைகாரணமாக நிலை மாறியிருக்கக் கூடும் என்றெண்ணிய பலருக்கு சமீபத்தில் "மிஸ் ஆனி ரூனி" என்ற படப்பிடிப்பின் போது அவள் கூறிய சில வார்த்தைகள் ஏமாற்றத்தை விளைவிக்கும்,அப்போது ஷெர்லி பல சிறுவர்களுடன் பழகுவதும் தனக்கு ஒரு பொழுது போக்காகவே இருப்பதாகக் கூறினுள்.

எதிர்காலத்தைப்பற்றி ஷெர்லியைச் சில கேள்விகள் கேட்டனர். அதற்கும் அவள் தான் வேடிக்கையையே எதிர்பார்ப்பதாகத்தெரிவித்தாள். ஒருவேளை கலாசாலையில் தான் சேர்ந்து படிக்கக்கூடும். இல்லாவிட்டாலும் இல்லை என்று அவள் கூறினுள்.

"என் தகப்பனுரும் தாயாரும் அந்தப் பொறுப்பை என்னிடமே விட்டுவிடப் போகின்றனர். நான் என்னமோ வருஷத்திற்கொரு படத்திலாவது நடித்துக் கொண்டுதான் இருக்கப்போகிறேன். எனக்கு நடிப்பதில் அவ்வளவு உத்சாகம் இருக்கிறது. அடுத்தபடியாக ரேடியோ மூலம் ஒலிபரப்புவதிலும் எனக்கு ஆசைஇருக்கிறது. சிறிது காலம் நடனத்திலும் பயிற்சி பெற விரும்புகிறேன்" என்று அவள் கூறி முடித்தாள்.

* * * *

ராணுவத்தில் நடிகர்

பிரபல நடிகரான க்ளார்க் கேபிள் அமெரிக்க ராணுவத்தில் சேர்ந்திருக்கிறார். விமானத்திலிருந்து யந்திர பீரங்கிப் பிரயோகம் பண்ணவும் யுத்தம் தீவிரமாக நடக்கும் பிரதேசத்திற்குப் போகவும் அவர் விரும்புகிருர்.

பிரதம மந்திரி

இருபதாம் செஞ்சுரி பாக்ஸ் கம்பெனியார் "யங் மிஸ்டர் பிட்" என்ற மகுடத்துடன் ஒரு உன்னதமான படத்தைக் தயாரித்திருக்கின்றனர். இந்தப் படம் இங்கிலாந்தில்தான் பிடிக்கப்பட்டது. இதற்காக மஹத்தான செலவு நேரிட்டது. படமும் உயர்தரமானதாக விளங்குவதாக விஷயமறிந்த நிபுணர்கள் கூறுகின்றனர். இங்கிலாந்தில் இப்படத்தைப்பற்றி பெருமையாகப் பேசாதவர்களே கிடையாது. இப்படத்தின் முக்கிய அம்சம் என்னவெனில் மிஸ்டர் பிட் காலத்தில் நடந்த சம்பவங்களுக்கும் தற்கால நிகழ்ச்சிகளுக்கும் இருக்கும் பொருத்தம் தான்.

* * * *

ஸர் ஸெட்ரிக் ஹார்ட்விக்

ஸர் ஸெட்ரிக் ஹார்ட்விக் எந்த வேஷத்திலும் நடிக்கத் தகுதிவாய்ந்தவர். ஆகவே அவர் "இதற்குப் பொருந்த மாட்டார் அதற்குப் பொருந்த மாட்டார்" என்று கூறக்கூடாது.

ஹாஸ்ய நடிகராகவும் அதற்குமுரண்பட்டவிதத்திலும் அவர் நன்கு நடித்திருக்கிருர்

ஆங்கில நாடக உலகில் நல்ல கீர்த்தி பெற்றதற்காக அவருக்கு 1934–இல் "ஸர்" பட்டமும் வழங்கப்பட்டது. "ப்ராங்கன்ஸ்டீன் பிசாசு" என்ற பயங்கரப் படத்தில் அவர் வெகு திறமையுடன் நடித்திருக்கிருர்.

அமெரிக்காவுக்கு வந்த பின் "பெக்கி ஷார்ப்" என்ற படத்தில் அவர் நடித்தது முதற்கொண்டு, அவருக்கு ஹாஸ்ய கதாபாத்திரங்களைக் கொடுப்பதில்லை ஆனுல் இவர் ஹாஸ்ய நடிப்பில் சிறப்புற்றதே அவருக்கு "ஸர்" பட்டம் கொடுக்கப்பட்டதன் காரணம் என்பதை வெகு சிலர்தான் அறிவர். அநேகம் ஆண்டுகள் அவர் ஹாஸ்ய வேஷங்களைத் தரித்திருக்கிருர். "ஹார்ட்ப்ரேக் ஹவுஸ்" "யெல்லோ ஸாண்ட்." "ஷோ போட்" முதலிய தமாஷ் படங்களில் அவர் நடித்தார்.

அட்டைப் படம்

பிரபல சினிமா நடிகை ஸ்நேஹ ப்ரபா.

உத்தம வீரன்

(முன் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டு நிற்கிறேன்—விதியின் கொடுமையைத் தவிர வேறு என்ன.

வீரன்,—ஐயா! தங்கள் கீர்த்திக்கு இழுக்கு எதுவும் ஏற்படும் படி யான் இடம் கொடேன்—மிகவும் கௌரவமாகவே அழைத்துச் செல்வேன். ஆனுல் அரசரால் தங்கள் உயிருக்கு ஹானி ஏற்படுமே என்று தான் வருந்துகிறேன்.

நாக:—விசாரணையின்றித் தண்டனையும் தீர்மானமாயிற்று?

வீரன்:—ஆம். தங்கள் குமாரர் தங்களுடைய ராஜ விசுவாசத்தைப்பற்றி எவ்வளவோ கூறியும், அரசர் தங்களை ராஜத்துரோகி என்றே தீர்மானித்தார்.

நாக:—ஊழிற்பெருவலியாவுள? அரசரை நோவதிலும் பயன் இல்லே—தாம் யார்?

வீரன்:—ஒரு ரஜபுத்திரன்—விஸ்வநாத நாயக்கரின் உயிர் நண்பன். தங்களைப்பிடித்து வரும்படி அரசர் பணித்தது அவரையே— அவர் என்னை அனுப்பினுர்,

நாக:—ஐயா! தாமும் எவ்விதத்திலும் அவனையே போன்றிருக்கிறீர்கள். தங்கள் குரல் எனக்கு அவன் நினைவையே யூட்டுகிறது.—அரசர் உத்தரவுப்படி அவனே நேரில் வந்திருக்கலாமே.

வீரன்:—அவர் நேரில் வந்தால் தாங்கள் மைந்தனென்னும் பாசத்தால் மிக மலிவாய் இணங்குவீர்கள். அவ்வித ஆண்மையற்ற காரியஞ் செய்ய அவருக்கு இஷ்டம் இல்லே.

நாக:—அவனே வீரன்—சரி, இனி அரச சமூகம் செல்லலாம் கைதியாகவாவது அவரைக் காணலாமல்லவோ?

வீரன்:—ஆ ஹா! நானே அழைத்துச் செல்கிறேன். (போகிருர்கள்)

ஏழாம் காட்சி

கிருஷ்ணதேவராயர் தனியறை

கி. தே:—ப்ரதான்! விஸ்வநாதனைப்பற்றித் தம் அபிப்பிராயம் யாது? அவனும் தன் தந்தையுடன் சேர்ந்து கொள்வானே. முன் பின் யோஜியாது தந்தையைக் கைது செய்யத் தனயனை நியமித்தேனே.

ப்ர:—அரசே! தாங்கள் அவ்விதம் எண்ணவேண்டாம். விஸ்வநாதன் அவன் தந்தையினும் மேம்பட்டவன்.

கி. தே;-அப்படியென்றுல் சந்தேகமில்லே—தந்தை நம்மை எதிர்க்கப் படை திரட்டினுன்; தனயன் அதற்குத் தலைமை வகிப்பான்.

ப்ர:—மாட்டான். அவன் தங்கள் பால் நன்றி மிக்கவன்.

கிதே:—எப்படி நம்புவது?

ப்ர:—நான் நன்கு அறிவேன். (படைகள் வரும் சப்தம்)

கி. தே:—அது என்ன கூச்சல் (இருவரும் போகிருர்கள்)

எட்டாம் காட்சி

சபா மண்டபம்.

விலங்கு பூட்டப்பட்ட நாகம்ம நாயக்கனை ராஜபுத்திர வீரன் அழைத்து வருகிருன்.

நாக:—விஜயநகர பரிபாலன ராஜாதி ராஜ ஸ்ரீகிருஷ்ண தேவராயரவர்களே? தங்கள் அரசாங்க சேவகத்தில் அதி உண்மையுடன் உழைத்ததின் பயனை இப்பொழுதே அடைந்தேன்—மரண தண்டனைக்கு ஆஸ்பதமாய் யானியற்றிய அபராதம் என்னவோ?

கி. தே:—ராஜத் துரோகம்.

நாக:—எவ்விதம்?

கி. தே:—அரச கட்டளையை நிராகரித்ததே.

நாக:—அரசே! நன்றி மறப்பது நன்று அன்று.

கி. தே:—போதும். இனிப் பேச வேண்டாம். இறுதியாக நீர் விரும்புவது என்ன?

நாக:—என் மைந்தனை ஒரு முறை காண.

கி-தே:—ஆம்—விஸ்வநாத நாயக்கரை இங்கே அழைத்து வா.

வீரன்:—(தன் ரஜ புத்திர உடைகளை நீக்கி) இதோயிருக்கிறேன். தந்தைக்கு மறலியாய்த் தோன்றிய தனயன்.

நாக:—விஸ்வநாதா! என்னருமைக் குமாரா;!—அப்பா! என் மனதிலிருந்த ஒரு பெருங் கவலை நீங்கிற்று. என்னை ஜயித்தது நானேயன்றி வேறு யாருமிலர்—இனி நிம்மதியாய்க் கொலைக்களஞ் செல்வேன்.

கி-தே:—விஸ்வநாதா—நீயே உத்தம வீரன். ஓர் வீரனின் கடமை என்னவென்பதை உலகறியச் செய்தாய். உன்னை என் ராஜ்யத்தின் தென்னுடு முழுவதுக்கும் ராஜப்பிரதிநிதியாக நியமித்திருக்கிறோம். வேண்டும் பொருள்களும், சிவிகை விருதுகளும் உனக்கு வெகுமதியாய்த் தந்தனம். இன்னும் நீ விரும்புவது எதுவாயினும் தரச்சித்தமாயிருக்கிறோம்.

விஸ்வ:—ராஜாதி ராஜனே! தந்தை என்ற வாஞ்சையால் பேசவில்லே......

கி. தே:—ஆம்–ஆம். இத்தனை உயரிய இராஜ விஸ்வாசமுள்ள குடும்பப்பிரதானியைத் துரோகி என்று மதித்தது அவசர புத்தியாலேயே—அத்தண்டனையை மீட்டிக்கொண்டோம்—நாகம்ம நாயக்கரே! மனஸ்தாபம் விடும். உம் புத்திரோத்தமனுடன் புகழ் பெற்று வாழும்.

ப்ர:—விஜயநகர ராஜப் பிரதிநிதி விஸ்வநாத நாயக்கருக்கு ஜே—நாயக்க வம்ச திலகத்துக்கு ஜே— உலகம் புகழும் உத்தம வீரனுக்கு ஜே—

சுபம்.

சிறுவர் கதை

★

அணிலின் தியாகம்

★

"சிவன்"

ராமர் சீதையைக் காணுமல் ஏக்கமுற்றிருக்கின்ருர். தம்பி லக்ஷ்மணனே சமுத்திரத்தைத் தாண்டி செல்வதற்காக வேலைது கட்டும் யோசனையில் ஆழ்ந்திருக்கின்ருர். வானர சேனைகளோ கட்டளையிட்டவுடன் மலைகளை ஹதம் செய்யத் தயாராக காத்துக்கொண்டிருக்கின்றன. இருந்தாலும் அவைகளுக்குள் இந்த பெரிய சமுத்திரத்தை எப்படி பாலம் கட்டுவது, நாம் செய்யும் காரியமெல்லாம் வியர்த்தமாகுமே என்று வாளாவிருந்தன. லக்ஷ்மணன் எழுந்து நின்று, "வானர வீரர்களே! ராம கைங்கரியத்தில் ஈடுபடுங்கள். உங்கள் இனத்தாரை யெல்லாம் கூட்டி வாருங்கள். தலைக்கு ஒரு கல் கொண்டு வந்து போடுங்கள். சீக்கிரத்தில் பாலம் கட்டியாய்விடும். செல்லுங்கள், செல்லுங்கள்" என்ருர்.

மரத்தில் தெய்வ அம்சம்போல் உட்கார்ந்திருந்தது ஒரு அணில். லக்ஷ்மணனுடைய ஆக்ஞையைக் கேட்டதும், 'தான் முன்பு சென்று ஒரு கல்லை கொண்டுபோய் சமுத்திரத்தில் போடவேண்டும். ராம கைங்கரியத்தில் தனக்கும் பங்கு கிடைக்கட்டும்' என்று ஒரு சிறு கல்லை வாயினுல் கவ்விக்கொண்டு ஓடி வந்தது. ராமர் முன் நின்றது. ராமர் குனிந்த தலை நிமிராமல் விசனத்தில் இருந்தார். அணில் அவருடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தது. "ராமா! இதற்கா விசனப்படுகிருய்! இந்த சமுத்திரத்தை பாலங் கட்ட உன் அன்பிருந்தால் என்னுல் முடியும். சிறு சிறு கல்லை கொண்டு வந்து போட்டாலே பெரிய மலையாய் குவிந்துவிடும். அப்புறம் அதன்மேல்நடந்து சென்று உன் காரியத்தைப் பார்க்கலாமே" என்று சொல்வனபோல் தலையை அசைத்து; அக்கல்லை இரண்டு கால்களால் தூக்கிக்கொண்டு, இரண்டு கால்களால் நடந்துகொண்டு சமுத்திரத்தில் போடுவதற்காகச் சென்றது.

வானர கூட்டத்தின் நடுவில் ஒரு கிழக் குரங்கு இருந்தது. குரங்குகளுக்கெல்லாம் கிறுக்குபுத்தி தானே! அணில் செய்கிற செய்கை அதற்கு விநோதமாரியிருந்தது: ஆச்சரியப்பட்டது. மறு கணமே அதன்மேல் குரங்குக்கு பொருமை ஏற்பட்டது. இந்த அற்ப ஐந்து, சிறிய கல்லை கொண்டு வந்து போட்டால் ஜலம் வத்திவிடுமா? வீராதி வீரர்கள் நாம் இருக்க இதற்கு என்ன அவ்வளவு கர்வம் என்று அதன்மேல் ஒரு கல்லை எடுத்துப் போட்டது. கல் அதன் முதுகின்மேல் விழுந்தது. அணில் முதுகும் நசுங்கியது. அதன் வாய், "ராமா! ராமா" என்றது. அணிலும் உயிர் விடும் தருவாயில் இருந்தது.

அணிலின் கூக்குரல் ராமரின் காதில் ரீங்காரம் போல் ஒலித்தது. அவர் கவலைகள் பறந்தோடின. தன்னை 'ராமா' என்று அழைத்தது யாராயிருக்கலாம் என்று கண நேரம் யோசனை செய்தார். விஷயம் தெரிந்தவர்போல நிமிர்ந்து நோக்கி, தம்பியைக் கூப்பிட்டு, "தம்பி லக்ஷ்மணு! ராமா என்னும் அபயக் குரல் என் காதில் கேட்கின்றது. முன்பொரு சமயம் ராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு போகும்போது, சடாயு எதிர்த்தான். கடைசியில் அக்கொடியோனுடைய வஜ்ராயுதத்தால் வெட்டுண்டு உயிரை விட்டான். உயிர் விடும் தறுவாயில் 'ராமா' என்று அலறினுன். இப்பொழுது யாருடைய துஷ்ட செய்கையாலோ எந்த பிராணிக்கோ கெடுதி நேர்ந்திருக்கிறது. வா போய்ப் பார்க்கலாம்" என்று எழுந்து மரணவஸ்தையில் இருக்கும் அணிலிடம் வந்தார்: பார்த்தார். தன்னை யறியாமல் அவர் கண்ணீர் விட்டார். "அன்ருெரு நாள் ராம காரியத்தில் குகன் செய்த சேவைக்கு என்னுடைய தம்பி ஸ்தானத்தில் இடம் கொடுத்தேன். இப்பொழுதோ நீயும் ஒரு தம்பி! நீ சின்ன ஐந்துவாயிருந்தும் இப்பெரிய காரியத்தில் பங்கெடுத்துக் கொண்டனையே! நீயே அறிவாளி! உன்னை உலகம் போற்றும்" என்று அதனை எடுத்து உள்ளங் கையில் வைத்துக் கொண்டு, ஒரு கையில் காயம் பட்ட இடத்தை தடவிக் கொடுத்தார். ராமருடைய விரல் பட்ட மாத்திரத்தில் அதன் உடல் பொன் மேனியாய் விளங்கிற்று. அவர் தடவிக் கொடுத்த இடத்தில் மூன்று கோடுகள் இருந்தன. அணிலும் அவருடைய கையிலேயே உயிரை விட்டது. உயிர் பிரிந்த உடலை எடுத்து தம் சடையில் அணிந்தார். ராமருக்கு இதுவும் ஒரு பொன் அணிகலம் போல் விளங்கிற்று. அணிலும் மோக்ஷம் அடைந்தது.

கடும் தேமலாக படருமா?

உங்கள் சரும நோய்களைஜாம்-பெக் குணப்படுத்தும்.

—:—

சிறு தழும்புகள், பிற்பாடு கடும் தேமலாக படருவதற்கான அடையாளம். எனவே எரிச்சல், புண் முதலியவற்றை அலக்ஷியம் செய்யாதீர்கள். பிரதி இரவும் ஜாம்-பெக் தடவுங்கள். ஜாம்-பெக்கிலுள்ள சுத்திகரிக்கப்பட்ட மூலிகை ஆயில்கள் சருமத்திற்குள் சென்று, வலியை சமனமூட்டி, வீக்கத்தைக் குறைத்துவிடும். ஜாம்-பெக் விஷக்கிருமிகளை ஒழித்து, தழும்பின்றி குணப்படுத்தும். எல்லா மருந்து வியாபாரிகளாலும் ரூ. 1 அல்லது 2—4 வீதம் விற்கப்படுகின்றது. ஜாம்-பெக் ஸோப் ரூ. 1. ஜாம்-பெக் பவுடர் ரூ. 1. ஏஜண்டுகள்:—
மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பி.டி. மதராஸ்.
எப்பொழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது.

கே. சுவாமிநாதன் & கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சீக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.

பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.



BURN'S REFRACTORIES



பர்ன் ரிப்ராக்டரி தொழிற்சாலைகள் சென்ற 80 வருஷங்களுக்கு மேலாக வேலை செய்து வந்திருக்கின்றது. மேல் உறையுடன்கூடிய குழாய்கள் தயாரிப்பதில் இடைவிடாத ஆராய்ச்சி செய்து வந்திருக்கின்றனர். ரிப்ராக்டரி சாமான்கள் தயாரிப்பதில் இந்தியாவிலேயே வேறு எவருக்கும் இல்லாத அனுபவத்தைப் பெற்றுவிட்டனர். சாதாரண செங்கல்முதல், சலிகா, மாக்னஸைட், க்ரோம், மேலான அலுமினு, கோபுலா, செங்கல் சூளைக்கல், இரும்பை எதிர்க்கும் சிமிட்டிகள் முதலியவற்றை பர்ன் கம்பெனியார் தயாரிக்கின்றனர். இவை எவ்வித உஷ்ணத்தையும் தாங்கிக்கொள்ளும்.

இந்திய ஊழியர்களைக்கொண்டு, இந்திய மூலதனத்துடன் இந்தியாவில் தயாரிக்கப்படுகின்றன. பர்ன் ரிப்ராக்டரி சாமான்களால் பிரயல் செலவு குறைவாகும். எந்த உஷ்ணத்திற்கும் சிறந்து இருக்கும்.

பூரா விவரங்களும் கேட்போருக்கு இலவசமாக அனுப்பப்படும்.

SAVE FOR VICTORY
BRITISH WAR SAVINGS MOVEMENT
ASK YOUR BANK

பர்ன் & கம்பெனி லிமிடெட்,
ஸ்தாபிதம்: 1781
12, மிஷன்ரோ, கல்கத்தா.
தொழிற்சாலை:- ராணிகஞ்சு & ஜபல்பூர்.
சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:—
பம்பாய் கம்பெனி லிமிடெட், த. பெ. நெ. 109, மதராஸ்.

BURN & CO., LTD.
ESTABLISHED 1781
12, MISSION ROW, CALCUTTA.
WORKS AT RANIGANJ AND JUBBULPORE

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனே இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்கியம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள்:—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற
குழந்தைகளின் டானிக்

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானுல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினுல் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

ஜகஜ்ஜாலன்

ஓர் அரிய பெரிய நூதனமான துப்பறியும் நாவல். ஜகஜ்ஜாலன் என்னும் திருடனுடைய வீரதீர பராக்கிரமங்கள். படிக்கப் படிக்க ஆச்சர்யமாயிருக்கும். 518 - பக்கங்கள் கொண்ட சுத்தப்பதிப்பு. விலை ரூ. 1—12—0 — தபாற்செலவு அணு 8.

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொருஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ.5/8. பத்து ஷிலிங்.
Dr. S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்கரூ.2. நேரில் ஒரு ஜாதகம பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித க்ரமியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டு போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

Printed and Published by T. S Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. *Editor*, C R. Srinivasan, B.A